Regd. No. M. 4900. 16 பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 22-11-1947 சனிக்கிழமை மலர் 11.

## உறுதி கொள்வீர்!

["கருணா"]

★

"வெள்ளையரே! வாணிபத்தை நாடி வந்த
வேற்றாரே! ஆண்டுவரும் மாற்றாரே, நீர்
கொள்ளையிட்டுச் சுரண்டியது போதும்; இன்றே
கூண்டோடு வெளியேறும் நாட்டை விட்டுக்,
கள்ளமிலா இந்தியரே இந்தியாவைக்
காத்துவரும் சுதந்தரத்தைக் கையில் தாரும்!
பிள்ளையிலாச் சொத்தல்ல!" என்று பேசிப்
பிடிவாதக் குழப்பங்கள் செய்ததாலே—

அழுகின்ற குழந்தையினை அமைதி செய்ய
அம்புலியைத் தண்ணீரிற் காட்டுதல்போல்,
தொழுகின்ற மக்களைக்கண் துடைக்க வேண்டிச்
"சுதந்தரமிந் தா!"வென்று சூழ்ச்சியாக
விழுகின்ற ஆரியத்தை நிலைநிறுத்தி
வெள்ளையர்கள் கூட்டுறவாய்ச் சதிகள் செய்தே,
உழுகின்ற—உழைக்கின்ற பாட்டாளிக்கும்,
உரிமையுடன் வாழ்ந்தபழங் குடிகளான

தென்னாட்டுத் திராவிடர்க்கும் தீங்கிழைத்தார்
திகழ்கின்ற வரலாறு, நாகரீகம்"
முன்னாளைக் கலை, மொழிகள், ஒருமை எண்ணம்,
முன்னிற்கும் இயற்கைவளம் ஆயவற்றால்
எந்நாளும் ஒன்றுபட்டே இலங்குகின்ற
இனமான திராவிடரே! உறுதி கொள்வீர்!
பன்னாளாய் எதிர்பார்த்த காலம் ஈதே;
பயன்படுத்தத் துணிவீரேல் வெற்றி உண்மை!

பெண்கள் பகுதி:

# பண்டிகைகளை ஒழிக்கப் பெண்கள்தான் முன்வர வேண்டும்.

[செல்வி]

★

"சரிதான் போங்க, உங்க நாயக்கர் பேச்சை உங்களோடு வைத்துக்கொள்ளுங்கோ. நோம்பன்னைக்கு ஊரிலிருக்கிற குழந்தைகளெல்லாம் புதிய துணிமணிகளைப் போட்டுக்கொண்டு சிங்காரமாய் இருக்கிறபோது நம் குழந்தைகள் மட்டும் என் நாதியற்ற குழந்தைகள் மாதிரி இருக்கவேணும்?......"

"சரி சரி. உன் பிரசங்கத்தை நிறுத்து. இந்தா ரூ. 50. வைத்துக்கொள். என்னமோ செய்து தொலை. ஆனால் ஒன்று மட்டும் கண்டிப்பு. அதென்னவென்றால் துணிகளைத் துவைத்து பெட்டி போட்டு பழையது மாதிரி செய்துகொள். மறந்தாப் போல் மஞ்சள் தடவிவிடாதே. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், என்னோடு யாராவது வீட்டிற்கு வருவார்கள். ஊரெல்லாம் தீபாவளி கொண்டாடாதே என்று வீர தீரமாய்ப் பேசிய என் வீட்டுக் குழந்தைகளே புதிய துணிமணிகளுடன் விளங்கினால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?..........."

இது போன்ற பேச்சுகள் பல வீடுகளில் நடைபெற்றிருக்கும் என்பதிலும், இருட்டுத் தனமாகத் தீபாவளி கொண்டாடப்பட்டிருக்கும் என்பதிலும் சந்தேகமேயில்லை. இம்மாதிரி சம்பவத்திற்குப் பொறுப்பாளி யார் என்று சிந்தித்துப் பாருங்கள்! ஏன் தீபாவளி கொண்டாட வேண்டாம் என்கிறார்கள்? பெரியார் அவர்களுக்கோ, சுயமரியாதை இயக்கத்தினருக்கோ, புதிய துணிமணிகள் மீது வெறுப்பா? தின்பண்டங்கள் மீது துவேஷமா? அவர்கள் கூறும் காரணங்கள் என்ன? சரியா? தப்பா? இவைகளை யோசிக்கவேண்டுமே தவிர ஊரிலிருக்கிறவர்களெல்லாம் அப்படிச் செய்கிறார்களே; நாம் சும்மா இருந்தால் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று கருதுவதற்குப்பதிலாக ஒவ்வொரு பண்டிகையைப்பற்றியும், அதற்காக எழுதிவைக்கப்பட்டுள்ள புராணக்கதைகளைப்பற்றியும், அவைகளிலுள்ள ஆபாசங்களைப்பற்றியும், மூடத்தனங்களைப்பற்றியும் விளக்கமாக அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்களுக்கும் எடுத்துக்கூறி அவர்கள் இனிமேலாவது இம்மாதிரியான பண்டிகைகளைக் கொண்டாட வெட்கப்படும்படியாகச் செய்ய வேண்டியதே நமது கடமையாக இருக்க வேண்டும். அம்முறையில் இதோ அடுத்துவரப்போகிற கார்த்திகை தீபத்தைப்பற்றிய கதைகளைக் கூறுகிறேன் கேளுங்கள்.

"கார்த்திகை தீபப் பண்டிகை"யை ஒரு பெரிய "தெய்வீகம்" பொருந்திய சிறந்த நாளாகக் கருதி இந்தியா முழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதை இந்து மதத்தில் உள்ள சைவர், வைணவர், வீரசைவர், ஸ்மார்த்தர் முதலிய எல்லாப் பிரிவினரும் கொண்டாடுகின்றனர்.

சாதாரணமாகக் கார்த்திகை நட்சத்திர தினத்தைச் 'சுப்பிரமணியன்'' என்னும் சாமிக்கு உகந்த சிறந்த நாளாகக் கருதியே 'பக்தர்கள்'' என்பவர்கள் விரதங்களும், பூஜைகளும் நடத்திவருகின்றனர். சாதாரண காலத்தில் வரும் கார்த்திகைகளைவிட, கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையே மிகவும் சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் பொருட்டுத் திருவண்ணாமலை முதலிய பல ஊர்களுக்கு யாத்திரைபோய்ப் பணத்தைச் செலவு செய்துவிட்டுத் திரும்புபோது அங்கிருந்து வாந்திபேதியைக் கொண்டுவருகின்றனர். ஒவ்வொரு மாதமும் கார்த்திகைக்காக, வைத்தீஸ்வரன் கோயில், குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் சுவாமிமலை, பழனி முதலிய ஊர்களுக்கு மக்கள் சென்று செலவுசெய்யும் செல்வங்களே பதினாயிரக்கணக்காகவும், இலட்சக்கணக்காகவும், ஆகும்போது 'பெரிய கார்த்திகை' என்று பெயர் பெற்ற கார்த்திகை மாதப் பண்டிகைநாளில் செலவாகும் பொருள் கோடிக்கணக்கில் குறைவுபடுமா? இதில் எவ்வாறு பொருள் வீணாக்கப்படுகிறதென்பதை நினைத்துப் பாருங்கள்! தீபாவளிக்காக வரவழைத்து விற்பனையாகாமல் கடைகளில் தங்கிக் கிடக்கும் பட்டாசுகளுக்கு செலவுவந்து இந்தப் பட்டாசுகளின்மூலம் பணம் படபடவென்று சத்தமிட்டு வீணாக்கப்படும்.

வீடுகளுக்குள்ளும், வெளிப்புறங்களிலும், காடுகளிலும், மேடுகளிலும், குப்பைகளிலும், கூளங்களிலும் எண்ணற்ற 100, 1000, 10,000, 1,00,000 கணக்கான விளக்குகளைக் கொளுத்திவைப்பதன்மூலம் செலவாகும் நெய் எண்ணெய்ச் செலவு எவ்வளவு! கோயில்கள் என்பவைகளுக்குச் 'சொக்கப்பானை' கட்டி நெருப்புவைப்பதற்காகச் செலவுசெய்யும் நெய், எண்ணெய், விறகு முதலியவைகளுக்காகும் செலவு எவ்வளவு! கார்த்திகைப் பண்டிகைக்காகத் திருவண்ணாமலை முதலிய ஊர்களுக்குப் பிரயாணஞ் செய்வதன் மூலமாகும் ரொக்கப்பணச்செலவு எவ்வளவு! அங்கு கூம்புக்கு (சொக்கப்பானை) செலவாகும் விறகு, கற்பூரம், வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்காகும் செலவு எவ்வளவு? இவ்வாறு பலவகையில் செலவு செய்யப்படும் கோடிக்கணக்கான பணங்களால் நமது நாட்டிற்குக் கடுகளவாவது பயனுண்டா என்று ஆலோசித்துப் பாருங்கள். இன்னும் இப்பண்டிகையினால் மக்களுக்குண்டாகும் மூடநம்பிக்கையையும், அதனால் உண்டாகும் மூடப்பழக்க வழக்கங்களையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! கார்த்திகையைப்பற்றி வழங்கும் புராணக்கதை இரண்டு, அவைகளில் ஒன்று:-

ஒருசமயம் 'அக்கினி தேவன்' (நெருப்பு) என்னும் 'கடவுள்' சப்தரிஷிகளின் மனைவிமார்களைப் பார்த்து மோகங்கொண்டானாம்.

[தொடர்ச்சி 15ம் பக்கம்]



நாடகப் பகுதி:

# உண்மை இராமாயணம்:

[பெரியார் ஈ. வே. ரா.]

[இராமாயணம் உண்மையா? பொய்யா? என்ற கேள்விக்கு, இராமாயணம் உண்மைதான் என்று வலியுறுத்துவதற்காக எழுதப்படுவதல்ல இந்த உண்மை இராமாயணம். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல் வேறு மொழிகளிலும் காணப்படும் பல் வேறு வகையான இராமாயணக் கதைகளை யறிந்தவர்கள் அவற்றுள் ஒன்றை எடுத்துணர்த்தி, இதுதான் உண்மை இராமாயணம் என்றால் எவருமே ஒப்புக்கொள்ள முடியாது. அறிவு ஒப்புக் கொள்ளாது. இங்கு உண்மை இராமாயணம் என்று கூறுவது வான்மீகி இராமாயணத்தையும், இராமன் கதையைக் கூறும் மற்றப் புராணங்களையும் சேர்த்து எண்ணும் போது, அவைகள் எந்த அளவில் உண்மையைத் தெரிவிக்கின்றன என்ற அடிப்படையை வைத்துக்கொடுக்கப்பட்ட பெயராகும் என்பதை நம் வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆ—ர்.]

## காட்சி 1.

[நாமம், திருநீறு, கோபி, சந்தனம் முதலியன நெற்றிகளில் துலங்க தாடி சடைமுடியுடன் கூடிய ரிஷிகள், முனிவர்கள் என்று சொல்லும்படியான தேவர்கள், சுமார் இருபது பேர் அடங்கிய கூட்டம்.

அக்கூட்டத்திலுள்ள தேவர்கள் அனைவரும் ஒருவர் மற்றவரைப்பார்த்து — நமோன் நமஹா! நமோன் நம! நமோன் நம! கல்யாண்! கல்யாண் என்று பெரிய ஆரவாரத்தோடு கூறிக்கொண்டு ஆனந்த மய பாவனைகளும் ஆணவமான முறையில் கூச்சலும் செய்து கொண்டு கனைப்போடு பேசிக்கொண்டிருக்க]

ஒரு தலைமைத்தேவர்—(மற்றைய தேவர்களை நோக்கி) தேவ சொரூபிகளே! தேவ தேவர்களே! நாம் எவ்வளவு பெருமையுடையவர்கள்? எவ்வளவு சக்தியுடையவர்கள்? எவ்வளவு தபோ பலம் உடையவர்கள்? நமது மந்திரங்களாலும், தந்திரங்களாலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கின்ற மூர்த்தீஸ்வரர்களையும், சொர்க்க, மத்திய, பாதாளமென்னும் லோகங்களையும் சிருஷ்டித்து, அவைகள் வேத சாஸ்திர விதிகளின்படி நடந்துவரக் காரண பூதர்களாயிருக்கும் நாம், நமது இனத்தின் தர்மத்திற்கேற்றபடி யாகாதி கர்மங்களை நியமனப்படி செய்ய ஒட்டாமல் இந்தத் தென் (திராவிட) நாட்டில் (இலங்கையில்) ஆட்சிபுரியும் இராவணன் என்னும் ஒரு அரக்கனும், அவனது இனத்தவர்களாகிய இராக்கதர்களும் நம்மைத் தடுத்து யாகம், பலி முதலிய அவிர்ப்பாகங்களைத் தடுத்து நமக்குப் பலவித இடுக்கண்களைச் செய்து வருகின்றார்கள். இதற்கு நாம் ஏதாவது பரிகாரம் செய்யாமல் எத்தனை நாளைக்கு விட்டுக்கொண்டிருப்பது?

மற்றொரு தேவர்:- ஆம்! ஆம்! நன்றாய்ச் சொன்னீர்கள்! ஸ்வாமிகளே! நான் தேவேந்திரனுக்கு ஸோமபானமும் கோமாம்ச அவிர்ப்பாகமும் செய்து ஒரு பட்சமாகின்றது.

மற்றொரு தேவர்:- ஆம்! நான் தேவேந்திரனுக்கு மான், காடி, பன்றி மாம்ச அவிர்ப்பாகம் கொடுத்து இரண்டு பட்சமாகின்றது. காட்டில் எங்கு சென்றாலும் இந்த அரக்கர்களான பாவிச் சண்டாளர்கள் வந்து, இந்த மிருகத்தைக் கொல்லாதே! அந்த மிருகத்தைக் கொல்லாதே! என்று கொடுமைப்படுத்துகிறார்கள். இனி நாம் அரை வினாடியும் சும்மாயிருக்கலாகாது. நாம் மிருகங்களைக் கொன்று யாகஞ் செய்தால், இந்த இராட்சதப் பேய்களான இராவணனுக்கும், அவனைச் சேர்ந்த அரக்கர்களுக்கும் ஏன் ஆத்திரம் வரவேண்டும்? நாம் ஸோமபானம் முதலிய மது அருந்தினால், இவர்களுக்கென்ன சங்கடம்? யாகாதிகளுக்குப் பலியாகவும் மும்மூர்த்திகளுக்கும் தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கும் அவிர்ப்பாகத்துக்காகத்தானே லோகத்தில் பசு முதலிய ஜீவ வர்க்கங்கள் பிரும்மாவினால் படைக்கப்பட்டிருக்கின்றன. இதை யறியாத இந்த இராவணன் முதலிய சமணப் பேய்களான திராவிட இராட்சதப் பதர்களது இம்மாதிரியான தடைகளுக்கும், நம் வேத சாஸ்திர விரோதமான காரியங்களுக்கும் இனி ஒரு க்ஷணமும் இடம் கொடுத்தால், தேவர்களாகிய நாம் உலகத்தில் எங்குமே வாழமுடியாது. மது இல்லாமலும், மாம்சம் இல்லாமலும் யாகாதி கர்மங்கள் எப்படி நடைபெறும்? யாகாதி கர்மங்கள் நடைபெறாவிட்டால் பிறகு உலகத்தில் தேவர்களுக்கு வேலைதான் என்ன? பிரும்மா, விஷ்ணு, சிவன், இந்திரன் ஆகிய ஈஸ்வரர்களை எப்படித்தான் திருப்தி செய்யமுடியும்? அவர்கள் இல்லாவிட்டால் நாம் ஏது? நமது உயர் வாழ்வுதான் ஏது? அக்ரமம்! அக்ரமம்! இந்த இராவணனும்

அவனது கூட்டங்களும் செய்வது மகா அக்ரமம்! அக்ரமம்!

மற்றொரு தேவர்:- ஆம்! ஆம்! நன்றாய்ச் சொன்னீர்! ஸ்வாமிகளே! இந்த அக்ரமத்தை நாம் சும்மா விடக்கூடாது. இந்த இராவணனையும் அவனது கிளைகளையும் நாம் அடியோடு அழித்தாக வேண்டும். நாம் ஜீவ வதை செய்கிறோமாம்! இந்தப் பாபிகள் ஜீவகாருண்யக்காரர்களாம்! சோமபானமும் மாம்சபக்ஷணமும் ஜீவஹிம்சையாம்! என்னே! இவர்கள் அக்ரமம், ஜீவராசிகளை நாம் படைக்கின்றோம். நமது தபஸ்களாலும் நமது பிரார்த்தனைகளாலும் அவை உயிர்வாழ்கின்றன. நாம் அவைகளுக்கு முக்தியைக் கொடுக்கின்றோம். சிருஷ்டி, ஸ்திதி, முக்தி ஆகிய முக்காரியங்களும் நம்மால் ஆவதை இந்த இராட்சதப் பதர்கள் எப்படி அறிவார்கள்? யாகத்திற்குப் பலியாகும் நரர்கள், பசுக்கள் மற்றும் மிருகாதி பறவை ஊர்வன ஆகிய ஜந்துக்கள், மோட்சலோகத்தை அடைவது இந்த இராட்சதப் பாவிகளுக்குத் தெரிவதில்லை. நாம் அவைகளை யாகத்தின்மூலம் மோட்சத்திற்கு அனுப்பாவிட்டால் இந்த ஜீவராசிகளுக்கு மோட்சம் ஏற்படுமா? இந்த மதிகேடர்கள், தாங்கள் ஏதோ இம்மாதிரியான தடைகள்மூலம் ஜீவன்களின் உயிரைக் காப்பாற்றுகின்றோம், ஹிம்சையைத் தடுக்கின்றோம் என்று பொருளற்ற அஹிம்சையைப் பேசுகிறார்களே தவிர, இந்த ஜீவராசிகள் நம்மால் மோட்சமடைவதை அறிவதில்லை. உலகில் யாகாதி கர்மங்கள் சரிவர நடந்து தேவர்களாகிய நாமும், மும்மூர்த்திகளாகிய ஈஸ்வரர்களும் வாழவேண்டுமானால் இந்த இராட்சதர்கள் பூண்டோடு அழிக்கப்படுவதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். அதற்காக நாம் யாவரும் தக்கபடி யோசித்து இப்போதே ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

மற்றொரு தேவர்:- இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நாம் எல்லோரும் யாருடைய அவிர்ப்பாகத்திற்காக யாகாதிகள் செய்கின்றோமோ, யாரை நாம் யாகாதிகளின் மூலம் ஆராதிக்கின்றோமோ, அவர்களான நம் மும்மூர்த்திகளிடம் இதைச் சொல்லுவோம். யாகாதி காரியங்கள் இல்லாவிட்டால் தேவர்களேது? மும்மூர்த்திகள் ஏது? மும்மூர்த்திகளுக்குக் கௌரவமேது? ஆகலால் அவர்களிடம் போய் முறையிடுவோம்.

மற்றுமுள்ள எல்லாத்தேவர்களும்: (ஒரே குரலாக) ஆம்! ஆம்! அதுதான் நல்ல யோசனை! நல்ல யோசனை! வாருங்கள் முதலில் பிர்மாவிடம் செல்லலாம். (எல்லோரும் போகிறார்கள்)

## காட்சி 2.

[பிர்மா, தனது கணங்கள் சுற்றியிருக்க, சரஸ்வதியோடு உட்கார்ந்துகொண்டு தனது சிருஷ்டி வேலையை, மண்ணைப் பிசைந்து சிறு உருவங்களைச் செய்வதன்மூலம் செய்துகொண்டிருக்கிறார்]

சரஸ்வதி:- பிரபோ! தாங்கள் எனக்குத் தந்தையா? கணவரா? உங்களை நான் என்னவென்று அழைப்பது?

பிர்மா:- பிரியே! நான்தான் உன்னைச் சிருஷ்டித்தேன். அதனால் நீ எனக்கு மகளாக வேண்டும். ஆனாலும் நீ மிக்க அழகாய் இருந்ததால் உன்னைச் சிவன் விஷ்ணு ஆகியோர் ஆசைப்பட்டார்கள், நானா விடுகிறவன்? முடியாது என்று சொல்லி நானே உன்னை மனைவியாகக் கொண்டு விட்டேன். பிறகு நீ என்னை நாதா என்று தானே கூப்பிட வேண்டும்.

சரஸ்வதி:- சரி நாதா! என்னைத் தாங்கள் எப்போதும் கைவிடக் கூடாது.

பிர்மா:- இல்லை, கண்மணி! நான் உன்னை என் நாவிலேயே வைத்திருக்கத் தீர்மானித்து விட்டேன். அங்கேயே எப்போதும் இரு.

சரஸ்வதி:- (தூரத்தில் பெரிய கூட்டம் வருவதைப் பார்த்துவிட்டு) என்னமோ பெரிய கூட்டம் வருகிறது போலிருக்கிறது, நான் உள்ளே போகிறேன்.

பிர்மா:- பரவாயில்லை. நீ இங்கு இருக்கலாம். நான் இருக்கும்போது என்ன பயம்?

வாயில் காப்போன்:- சுவாமி! தேவர்கள் கூட்டமாகத் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்.

பிர்மா:- அப்படியா? உடனே உள்ளே விடு அவர்களை.

தேவர்கள்:- நமஸ்தே! நமஸ்தே! நமஸ்தே! நமஸ்காரம் பிர்மதேவரே!

பிர்மா:- கல்யாண்! தேவர்களே! என்ன விசேஷம்? என்னைத் தேடி இவ்வளவு தூரம் வந்து விட்டீர்கள்.

தலைமைத் தேவர்:- பிரபோ! எங்கள் வாழ்வுக்குக் கேடு ஏற்பட்டு விட்டது. எங்கள் யாகம் இனி நடைபெற முடியாமல் ஆகிவிட்டது. நாங்கள் மிருகங்கள் முதலியவைகளைக் கொல்லக்கூடாதாம். யாகத்துக்குப் பலி கொடுக்கக்கூடாதாம். இராவணன் என்ற பெயருடையவனாய் இராட்சதர்களுடைய தலைவன் ஒருவன் தென்னாட்டில் இருக்கின்றான். அவனுடைய ஆட்சி மிக்க அக்கிரமமாய் இருக்கிறது. நம் தேவேந்திரனையே தனக்கு அடிமையாக்கிக் கொண்டு விட்டான் என்றால் இனி அவன் கொடுமையைச் சொல்லவேண்டுமா? கள், மதுவைக்கூட அருந்தக்கூடாதாம். இது என்ன அக்கிரமம்? உலகில் எங்காவது இப்படிப்பட்ட அக்கிரமம் உண்டா? இந்த இராவணன் முதலிய இராக்கதர்கள் அடியோடு ஒழிந்தாலொழிய, தேவர்களாகிய எங்களுடைய ஒரு காரியமும் நடக்காது. நாங்கள் இனி உயிர் வாழவே முடியாது. பிரபோ! அவன் லேசானவனல்ல. மகா தவசிரேஷ்டன். மகா வரப்ரசாதி. மகாபக்தன். இந்த ஆணவத்தால் யாரும் ஜீவஹிம்சை செய்யக்கூடாது, மது மாம்சம் சாப்பிடக்கூடாது, இவைகள் கொண்ட யாகப் புகையே தெரியக்கூடாது என்கிறான். மகாபாபி! மகா அயோக்கியன்! மகா அக்கிரமக்காரன்! ஆதலால் இப்படிப்பட்ட இவன் ஒழிந்தாலொழிய தேவர்களாகிய எங்களுக்கு வாழ்வில்லை! தேவேந்திரனுக்கு விடுதலை இல்லை. உங்களுக்கும் அவிர்ப்பாகமில்லை. ஆகையால் எங்களைக் காப்பாற்ற வேண்டும். [என்று கூற அனைவரும் கைகூப்பி வணங்குகின்றனர். இந்தச்

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

# சமயம் வேறு கடமை வேறு.

[கைவல்யம்]

★

சமயம் வேறு கடமை வேறு. சமயம் என்பது மனிதனுடைய மனம் பூரணப்படாமல், இன்னொன்றை யாசிக்கின்ற சுபாவத்திற்கு ஏற்பட்ட பரிகாரம். கடமை என்பது மனிதனுடைய நீங்காத பொறுப்பு—தர்மம். அதைச் செய்யாதவன் மனிதனல்லன். தர்மமான கடமையைச் செய்தவர்களின் கூட்டங்களும் தேசங்களும் மேன்மையடைந்திருக்கின்றன. தர்மமான கடமையைச் செய்வது கஷ்டமென்பதாகவோ, ஒரு சமயம் அநேக நாள் செல்ல வேண்டியதென்பதாகவோ பயந்து, லேசுவாக மோட்சத்தையோ காரியசித்தியையோ பார்ப்பானுக்குப் பணம் கொடுத்துச் சம்பாதித்து விடலாம் என்று நினைத்து, அவனைக் கேட்டு அவன் சொல்லுகிறபடி 'அபிஷேகம் அர்ச்சனை நவக்கிரக ஜெபம் கணபதி ஓமம் சாந்தி மந்திரம் இருபத்தேழு பார்ப்பானுக்குச் சாப்பாடு தட்சணை' முதலியவைகள் என்கிற காரியங்களில் ஆசை பிறந்து, இவைகளையே எதற்கும் சொல்லி இப்படியே செய்து வந்த பழக்கத்தால், தர்மமான கடமைகளெல்லாம் கெட்டுத் தேசங்களும் ஜனங்களும் பாழ்பட்டுப் போனார்கள். மேனாட்டில் சமயத்திற்கும் கடமைக்கும் சம்பந்தமே இல்லை. மனிதனுடைய கடமை என்று, அங்கு தருமம் நடத்தப்படுகிறது. அதனால் அவர்கள் உயர்வோடிருக்கிறார்கள். அவர்கள் நாட்டில் எல்லாப் பாக்கியங்களும் நிறைந்திருக்கின்றன. சமயத்தைவிட, கடமை உயர்ந்தது என்பதுதான் நமது கொள்கையும். ஆனால் பார்ப்பனர்கள் பிழைப்பின் நிமித்தம் கடமையைச் சமயத்தில் சேர்த்துக் கொண்டு விட்டார்கள். "தருமம் கெடும் பொழுது நான் வருவேன் என்றாரே ஒழிய மதம் கெடும் பொழுது நான் வருவேன்" என்று பார்ப்பனர்கள் போற்றும் பகவான் கிருஷ்ணர் சொல்லவேயில்லை.

இப்பொழுது வேண்டுவது சமயத்தில் கலந்த கடமையல்ல. முதலில் கோடிக்கணக்கான மக்களுக்கு வயிற்றுக்கு ஒரு பிடி அன்னம் கிடைக்கட்டும். ஞானத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளுவோம். நம்மவர்கள் மண்டையில் மட்டுக்கு மிஞ்சின சமய விஷயங்களைத் திணித்து வைக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் கடமையைப்பற்றிய ஒரு கவலையையும் ஏற்படுத்தவில்லை. இந்நிலையில் வெறும் சமயத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு மக்கள் பசியால் வாடுகிறார்கள். "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" ஒழுக்கம் ஞானம் ஒன்றும் காண முடியாமல பலஹீனமும் கல்விஞானமும் உடலையும் நமக்குள் நிறைவதால்தான் நம்நாடு துச்சத்தை அடைகிறது. சாஸ்திர சித்தாந்தங்கள் லட்சக் கணக்காகவும் சமயச் சம்பிரதாயங்கள் கோடிக்கணக்காகவும் ஏற்படுத்தலாம் எழுதியும் வைக்கலாம். எவ்வளவு செய்தும் என்ன பயன்? உண்மைச் சமயம் உங்களுக்குக் கற்பிப்பது போல் மற்றவர்களும் உங்கள் தேகங்களின் அம்சங்களேயென்றும், ஏழைகளும் பணக்காரர்களும் புண்ணியவான்களும் பாபிகளும் எல்லோரும் பிர்மமெனப்பட்ட அகண்ட பரிபூரண சொரூபத்தின் அம்சங்களே யென்றும், நீங்கள் மனதார உணர்ந்து எல்லா ஜீவர்களிடத்தும் ஜீவகாருண்ணியத்துடன் பிரவிர்த்திக்கின்ற வரையில், சமயத்தாலும் அதன் கர்த்தாவான கடவுளாலும் நீங்கள் ஒரு நன்மையுமடையப் போவதில்லை.

### சமயம் வேறு, சாஸ்திரம் வேறு.

சமயம் வேறு, சாஸ்திரிகளின்—குருமார்களின் சாஸ்திரம் (கட்டுப்பாடு) வேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும் சாம்பலும் போலாம். சமயத்தை மீறிக் கட்டுப்பாடு செல்லும்போது நதியை மணல் மூடுவதுபோல் ஆகிறது. அங்கு நீர் கெட்டுப் பாலைவனம்போல் தோன்றும். இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சியடைவோர் மிகக்கெட்டவர்கள் என்பது வெளிப்படையானாலும் நாமெல்லாம் அநேகமாக அதிலேயே மூழ்கிக் கிடக்கின்றோம். இதில் முழுகாத ஜாதியெதுவோ அதுதான் தலைதூக்கும்.

ஒருவன் மற்றவனைக் கஷ்டப்படுத்தினால் இருவருக்கும் கேடு என்று சமயம் சொல்லுகிறது. மகள் விதவையாகிப் பட்டினி கிடக்கும்போது இன்ன திதியில் அவளுக்குத் தாகத்திற்கு ஜலம் கொடுத்தால் பெற்றோர்களுக்குப் பாவமென்று குருமார்களின் சாஸ்திரம் (கட்டுப்பாடு) சொல்லுகிறது.

பச்சாத்தாபத்தாலும் சத்கர்மத்தாலும் ஒருவன் பாவத்தைக் கழுவலாமென்று சமயம் சொல்லுகிறது. கிரகணத்தன்று இன்ன நீரில் முழுகினால், தன் பாவம் தீருவதுடன் பதினான்கு தலைமுறைப் பிதுர்க்கள் செய்த பாவமும் தீருமென்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

எல்லா இடங்களையும் சுற்றி இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக்கண்டு களிக்க வேண்டுமென்று சமயம் சொல்லுகிறது. கடலைத் தாண்டினால் பாவமென்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

எக்குடிப் பிறந்தாலும் உண்மையுடையவன் தொழத் தக்கவன் என்று சமயம் சொல்லுகிறது. பிராமணனாய்ப் பிறந்தவன் மஹாபாவியானாலும் அவன்தான் வணங்கத் தக்கவன் என்று குருக்களின் கட்டுப்பாடு சொல்லுகிறது.

புருஷனுக்குப் பெண்ஜாதி துணையாயிருந்து எப்படி ஊழியம் புரியவேண்டுமோ அப்படியே பெண்ஜாதிக்குப் புருஷன் செய்யவேண்டுமென்று சமயம் சொல்லுகிறது, பெண்ஜாதி வீட்டிற்கு விலக்காயிருக்கும் சமயம் நோயுற்றுப் பேச்சற்று நாக்கு இழுத்துக் கிடந்தாலும், புருடன் தொட்டுத் தண்ணீர் கொடுத்தால் நரகத்திற்குப் போவானென்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

பெண்ணும் ஆணும் வயதுவந்து பக்குவமடைந்து இருவர் பக்குவமும் பூரணப்பட்டபின் விவாஹம் செய்துகொண்டு சுகமாய் இருங்கள் என்று சமயம் சொல்லுகிறது. ஒருவயதிலிருந்து பத்து வயதுவரையிலும் பத்து லட்சம் முண்டைகளை (விதவைகளை) நிரப்பிக் கொள்ளுங்கள் என்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

பக்குவமான ஒத்த ஆணும் பெண்ணும் பள்ளியறைக்குப் போங்களென்று சமயம் சொல்லுகிறது. அறுபது வயது ஆணுக்கும் பத்துவயதுப் பெண்ணிற்கும் விவாகமான மறுநாளே வீட்டிற்குள் இருவரையும் பிடித்துத் தள்ளி பூட்டு என்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

ஜீவகாருண்யமும் எல்லா ஆத்மாக்களிடத்தும் அன்புமே கடவுள் என்றும் இதைத் தெரிந்துகொள்ளுகிறவனே கடவுளைச் சேவிக்க லாயக்குடையவனென்றும் சமயம் சொல்லுகிறது. கடவுளைச் சேவிக்கப்போகும் வழியில் தண்ணீரில்லாமல் சாகும் ஒருவனுக்குத் தண்ணீர் கொடுத்தால் அவன் பிழைப்பான் என்று பட்டாலும் அவனுக்குத் தண்ணீர் கொடுப்பதும், அவன் நிழல் நம்மீது படுவதும் பாவம் என்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

பாவத்தில் பெரிய பாவம் குடிக்கத் தண்ணீர் இல்லை என்பது. ஆதலால் தவித்த வாய்க்குத் தண்ணீர் வார்க்காதவன் பாவி யென்கிறது சமயம். வீட்டிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தால் வீட்டிலுள்ள தண்ணீரெல்லாம் தோஷப்பட்டு விட்டது என்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

சுருங்கக் கூறுமிடத்து சமயம் விடுதலையைப் போதிக்கிறது. குருக்களின் கட்டுப்பாடு (சாஸ்திரம்) பாவத்தை

# செய்தியும்—சிந்தனையும்.

[பொறுக்கி]

★

● பாகிஸ்தானில் பறையர்களைவிட ஈனமான முறையில் (இந்துக்கள்) நடத்தப்படுவதை நாம் எப்படி அனுமதிக்க முடியும்.

"கிருபாலினி"

பறையர்களை யார் எங்கு எப்பொழுது ஈனமாக நடத்துகின்றார்கள் என்பதை இவர் உணர்ந்தேயிருக்க வேண்டும் என்று வெளிப்படுகின்றது. ஆனால் இவரும் இவர் தலைமை தாங்கிய காங்கரசும் பறையரின் ஈனநிலை போக்கப் பாடுபட்ட வகை என்ன? எந்த அளவு ஈன நிலை ஒழிந்திருக்கின்றது?

0 0 0

● கண்ணைக் கவரும் பண்டித ஜவஹரின் முழு உருவப்படமொன்று இலண்டனிலுள்ள இந்தியக் காரியாலயத்தில், இந்தியக் கவர்னர்-ஜெனரல் மவுண்ட் பேட்டன் பிரபுவால் திறந்து வைக்கப்படும்.

"செய்தி"

வெள்ளைப் பிரபுவின் கண்ணைக் கவர்வது, கறுப்பு ஏழையின் கண்ணைக் குடையுமென்று எதிர்பார்ப்பது இயல்புதானே.

0 0 0

● டிசம்பர் மாதம் நாலாந்தேதி சென்னைக் கௌன்சிலில் மகாத்மா காந்தியின் உருவப்படத்தைச் சென்னை கவர்னர் ஆர்ச்சி பால்ட் நை திறந்து வைப்பார்.

"செய்தி"

திராவிடர்கள் நீண்ட நாளைக்கு முன்னாலேயே கூறிய, "திரைமறைவில் நடந்த லீலையே" இப்பொழுது திரையை அகற்றி விட்டு நடக்கின்றதென்று இனிக் கூறலாமல்லவா?

0 0 0

● சுதந்தர சர்க்கார் பதவியேற்ற 10 நாட்களுக்குள் ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. அதிலிருந்து நாம் தப்பி இந்த மட்டிலாவது இருப்பதற்குக் கடவுளின் அனுக்கிரஹம் ஒரு காரணம்.

யுண்டு பண்ணி மக்களை அடிமைப் படுத்தி ஆனந்தப்படுகிறது.

மதத்தின் பெயரால் பிழைப்பிற்காக ஏற்படுத்திக்கொண்ட சில கிரிகைகளுக்கும் பாவனைகளுக்கும் சிறிது பணம் செலவு செய்து விட்டு, தனக்கெல்லாம் வந்து விட்டது, நான் செய்ய வேண்டியதெல்லாம் செய்து முடிந்து விட்டது என்று நினைப்பவர்கள், தங்களிடம் கணக்குக் கேட்கும் காலம் வரும்போது நஷ்டக் கணக்குத்தான் காட்ட முடியுமென்பதை உணரவேண்டும்!

நல்வினைப் பயனாக ஜவஹர் நம்தலைவாராகக் கிடைத்திருப்பது மற்றொரு காரணம்.

"யூனியன் நிதி மந்திரி"

இவர் வேறு யாருமில்லை. விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாட்டுத் தலைவரான சாட்சாத் தோழர் ஆர். கே. சண்முகமேதான்.

0 0 0

● காந்திஜீயின் அடிப்படைக் கல்வித் திட்டத்தை சீனா பரீட்சார்த்தமாக நடத்திப் பார்க்கப்போவதாக சீனப் பிரதிநிதி என்னிடம் தெரிவித்தார்.

"ராஜகுமாரி அமிர்தகௌரி"

புரட்சிவீரன் சன்யாட்சென்னால் பத்துணர்வுபெற்ற சீனாவே! உனக்கும் இந்தப்புத்தி ஏன் வந்ததோ? பன்றியோடு சேர்ந்த கன்றும்.........என்பது இதற்குத்தான் போலும்.

0 0 0

● சென்னை சர்க்காரின் முக்கியமான நடவடிக்கைகள், தீர்மானங்கள் அனைத்தையும் நாட்டில் ரேடியோமூலம் அறிவிப்பதற்காக, டிரங்க் டெலிபோன்மூலம் இத்தகைய சமாச்சாரங்களை டில்லியிலுள்ள அகில இந்திய ரேடியோ நிலையத்திற்கனுப்ப ஏற்பாடுகளாகி வருவதாகத் தெரிகிறது.

"செய்தி"

சர்க்காரின் நடவடிக்கைகள் சந்தி சிரிக்கப்படுவதை அடக்கிப் பெருங் குரலோடு முழக்க இம்முயற்சி வெற்றிதரும்

## மணமகள் தேவை.

★

மணமாகாத இளைஞர். வயது 24. I E M E என்ஜீனியரிங் செக்ஷனில் உத்தியோகம். இப்போது வருமானம் மாதம் ரூ 95. எதிர்காலத்தில் இதனிலும் உயர்வாகும். 7500 ரூபாய் ஸ்தாவர சொத்துடையவர். இந்த இந்து இளைஞருக்கு நல்ல அழகும் படிப்புமுள்ள மணமகள் வேண்டும். மணமகள் எந்த வகுப்பைச் சேர்ந்தவராயிருப்பினும், கன்னியாகவோ, விதவையாகவோ இருப்பினும் சரியே. போட்டோ அனுப்பின் நலம். கடிதங்கள் இரகசியமாய் வைக்கப்படும். கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

P. S. மணி

(A-1) C/o குடியரசு, ஈரோடு.

என்ற நம்பிக்கையே இந் நடவடிக்கையா?

0 0

● காங்கிரசைத் தவிர வேறெந்த ஸ்தாபனத்திற்கும் விசுவாசம் காட்டாத பம்பாயைச் சார்ந்த 300 சுறுசுறுப்பான காங்கரஸ் வாதிகள், இரண்டு நாள் ஆலோசித்து "சுறுசுறுப்பான காங்கரஸ் ஊழியர்கள்' என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனத்தை அமைத்துக் கொள்ளத் தீர்மானித்தனர். 'செய்தி"

பச்சோந்திகளும் சோம்பேறிகளுமான காங்கரஸ்காரர்கள் என்று மற்ற காங்கரஸ்காரர்களை இந்த முந்நூறுபேரும் குற்றஞ்சாட்டுகிறார்களே, இவர்கள் என்ன யோக்கியர்கள்? என்று நம் சென்னைக் காங்கரசார் கேட்கலாமல்லவா?

0 0

● மாதர்கள் தங்களது குழந்தைகளுக்கு வகுப்புவாத உணர்ச்சி ஊட்டாமல் அவர்களை வளர்க்கவேண்டும்.

'பெண்கள் மாநாட்டின் தீர்மானம்"

மற்றவர்களைத் தொட்டுச் சுவைத்துருசி பார்த்துக்கொண்டே, 'தொட்டால் தீட்டு" 'உண்டால் தீட்டு"என்று பிறந்த குழந்தைகளுக்குக் கூறும் பார்ப்பனப் பெண்களை மனதிலெண்ணியே இத்தீர்மானம் நிறைவேறியிருக்கவேண்டும் என்பதில் ஆட்சேபணையுண்டோ?

0 0

● அரவிந்த ஆச்சிரம சம்பந்தமாக விரும்பத்தகாத செய்திகளைக்கேட்டு காந்திஜீ ஆச்சரியமுற்றார். "செய்தி"

விரும்பத்தகாத செய்தி வேதனையை விளைவிக்குமா? ஆச்சரியத்தை விளைவிக்குமா? வடநாட்டவர் தென்னாட்டில் குடியேறி விரும்பத்தகாத நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருப்பது, மகாத்மா என்ற பட்டமில்லாமலே எவ்வாறு சாத்தியம்? என்பதே ஆச்சரியத்திற்குக் காரணமாயிருக்கலாமல்லவா?

0 0

● ஸ்ரீசனீச்வர பகவான் உறையும் க்ஷேத்திரமும், நளமகாராஜன் சனீஸ்வரனின்று விடுபட்ட ஸ்தலமுமான திருநள்ளாறு ஆலயம், சர்க்கார் உத்தரவால் எல்லா வகுப்பு ஹிந்துக்களுக்கும் திறக்கப்பட்டிருக்கின்றது. "செய்தி"

புதிதாய் ஆலயத்துள் வருகின்ற ஹிந்துக்களையும் சனீஸ்வரன் அகப்படுத்திக் கொள்வான் என்பதற்கு இது நல்ல அத்தாட்சியா?

0 0

● நேருவின் படத்தைப் பார்ப்பதன் மூலம் சேலம் நகரசபைக் கவுன்சிலர்களும் சுயநலம், ஜாதிப்பற்று இல்லாமல்

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

# நீதிக்கட்சியின் எதிர்கால வேலைகள்.

[இவைகளை இந்தியக் காங்கரசை ஏற்றுக்கொள்ளச் செய்கின்றேன் எனச் சிறையில் பெரியாருக்கு உறுதிகூறிப் பெற்று, காங்கரசிற்கு ஜீரணிக்கும் வலிமை இல்லை என்று தோழர் காந்தியாரைக் கலந்த பிறகு கூறினார் தோழர் ஆச்சாரியார், இன்றையக் கவர்னர் ஜெனரல். காங்கரஸ் ஜீரணிக்கமுடியாததை அன்றைய நீதிக் கட்சி ஜீரணிக்க முன்வந்தது. 7-6-34ம் நாள் கீழ்வரும் 10 முடிவுகளையும் தனது எதிர்கால வேலைகள் என ஒப்புக் கொண்டு நீதிக்கட்சி வெளிப் படுத்தியன. ஆ-ர்]

1. அரசாங்க உத்தியோகச்சம்பளங்கள் மக்களின் பரிசுத்தத் தன்மையைக் கெடுக்கக்கூடியதாகவும், பேராசையை உண்டாக்கக்கூடியதாகவும், இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிகமிகத் தாங்க முடியாததாகவும் இருப்பதால் அவைகளைக் குறைத்து உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும், மீத்துப் பெருக்கி வைப்பதற்கு லாயக்கில்லாததாகவும் இருக்கும்படி செய்யவேண்டும்.

2. பொதுஜனத் தேவைக்கும், சௌகரியத்துக்கும் நன்மைக்கும் அவசியமென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழிற்சாலைகள் இயந்திரச்சாலைகள் போக்கு வரவுச் சாதனங்கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படி செய்யவேண்டும்.

3. ஆகார சாமான்கள் உற்பத்திசெய்யும் விவசாயிகளுக்கும், அவற்றை வாங்கி உபயோகிக்கும் பொதுஜனங்களுக்கும் மத்தியில் தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தையும், சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

4. விவசாயிகளுக்கு இன்று உள்ள கடன்களை ஏதாவதொரு வழியில் தீர்ப்பதுடன் இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும்படியும், விவகாரங்கள் குறையும்படியாகக் கோர்ட்டு முறையும் சட்டத்தன்மையும், வக்கீல் தொல்லையும் ஒழியும்படியும், சொத்து பாத்திய விவகாரத்திற்கு இடமில்லாமல் சரியான ஆதாரம் சர்க்காரே வைத்திருக்கவும், ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் குறிப்பிட்ட ஒரு அளவு கல்வியாவது எல்லா மக்களுக்கும் ஏற்படும்படியாகவும், ஒரு அளவுக்காவது மதுபானத்தின் கெடுதி ஒழியும்படியாகவும், ஒரு அளவுக்கு உத்தியோகங்கள் எல்லா ஜாதி மதக்காரர்களுக்கும், சரிசமமாய் இருக்கும்படிக்கும் உடனே ஏற்பாடுகள் செய்வதுடன் இவை நடந்து வருகின்றதா என்பதையும் அடிக்கடி கவனித்து தக்கது செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

6 மதங்கள் என்பவைகள் எல்லாம் அவரவர்களுடைய தனி எண்ணமாகவும், தனி ஸ்தாபனங்களாகவுமே இருக்கும்படி செய்வதுடன் அரசியலில்—அரசியல் நிர்வாகத்தில் அவை எவ்வித சம்பந்தமும், குறிப்பும் பெறாமல் இருக்கவேண்டும். ஜாதிக்கென்றோ மதத்திற்கென்றோ எவ்விதச்சலுகையோ, உயர்வு தாழ்வு அந்தஸ்தோ அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக் கையாடுவதோ ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக்கூடாது.

7. கூடியவரை ஒரு குறிப்பிட்ட ரொக்கவரும்படிக்காரருக்கோ, அல்லது தானே விவசாயம் செய்யும் விவசாயிக்கோ வரிப்பளுவே இல்லாமலும் மனித வாழ்க்கைக்குச் சராசரி தேவையான அளவுக்குமேல் வரும்படி உள்ளவர்களுக்கும், அன்னியரால் விவசாயம் செய்யப்படுவதன்மூலம் பயனடைபவர்களுக்கும் வருமானவரி முறைபோல் நிலவரி விகிதங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

8. லோக்கல்போர்டு, முனிசிபாலிட்டி, கோவாபிரேட்டிவ் இலாகா ஆகியவைகளுக்கு இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இவற்றின்மூலம் மேலே குறிப்பிட்ட பல காரியங்கள் நிர்வாகம் செய்ய வசதிகள்செய்து தக்க பொறுப்பும் நாணயமும் உள்ள சம்பள அதிகாரிகளைக்கொண்டு அவைகளை நிர்வாகம் செய்யச்செய்ய வேண்டும்.

9 விவகாரங்களையும், சட்ட சிக்கல்களையும் குறைப்பதுடன் சாவுவரி விதிக்கப்படவேண்டும்.

10. மேலேகண்ட இந்தக் காரியங்கள் நடைபெறச் செய்வதில் நமே சட்டங்கள் செய்து அச்சட்டங்களினால் அமுலில் கொண்டுவரக் கூடியவைகளை சட்டசபைகள் மூலமும், அந்தப்படி சட்டங்கள் செய்துகொள்ள அதிகாரங்கள் இல்லாதவைகளை கிளர்ச்சிசெய்து அதிகாரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

குடிஅரசு

22-11-47 சனிக்கிழமை

## காங்கரஸ் ஆட்சி

★

காங்கரஸ் உண்மையிலேயே "சுயராஜ்ஜியம்" பெற்றுவிட்டது. ஆனால் இந்த சுயராஜ்ஜியம் என்பதை இந்தியா கண்டத்திலுள்ள பொதுமக்களின் சுயராஜ்யம் என்று நாம் சொல்லவில்லை. காங்கரசையே நாம் ஒரு போதும் பொது மக்கள் பிரதிநிதி ஸ்தாபனம் என்று சொன்னதும் கிடையாது. காங்கரஸ் ஆரியர்களின் ஸ்தாபனமேயாகும். இந்தத் தென்னாட்டை (திராவிடநாட்டை)ப் பொருத்தவரை காங்கரசைப் பார்ப்பன (பாதுகாப்பு) ஸ்தாபனம் என்றே சொல்லி வருகிறோம். காங்கரசும் அந்தப்படியே பார்ப்பன ஆதிக்க பாசிச ஸ்தாபனமாகவே இருந்து வருவதையும் அடிக்கடி எடுத்துக்காட்டி மெய்ப்பித்து வருகிறோம். அப்படிப்பட்ட காங்கரசுக்குச் சுயராஜ்யம் வந்துவிட்டது என்றால், பார்ப்பனர்களுக்கு தான் உண்மையான சுயராஜ்யம் வந்துவிட்டது என்பதே நாம் சொல்லுவதின் கருத்து.

இந்த "சுயராஜ்யம்" வந்தநாள் முதல்கொண்டு பார்ப்பனரின் நலத்துக்குஆன காரியங்களைச் செய்துகொள்ளுவதும், அவர்களையே உயர்த்திக்கொள்ளுவதும், அவர்கள் தவிர்த்த மற்ற மக்களுடைய நலத்தைப்பற்றிக் கவலை இல்லாமல் இருப்பதோடு, அவர்களுக்கு என்ன என்ன கேடுகள் தொல்லைகள் ஏற்படவேண்டுமோ அவைகளைச் செய்து மேலும் தாழ்த்துவதும் ஒடுக்குவதுமே முக்கிய காரியமாய்க்கொண்டு ஆட்சி செய்யப்பட்டு வருகிறது.

நம் தென்னாட்டைப் பொருத்தவரையில், தென் இந்தியாவில் வாழும் மக்களுக்கு இந்த சுயராஜ்ய ஆட்சியில் எவ்விதச்சுதந்தரமும் இல்லை. வேண்டுமானால் இந்தப்பார்ப்பன பாசிசஆட்சியை ஏற்று, அதற்கு அடிமைப்பட்ட சிலருக்கு பதவி, சம்பளம் முதலியவைகளும் அதற்கு அடியோடு சரணாகதி ஆனவர்களுக்கு லஞ்சம், லைசென்ஸ், பர்மிட்டு முதலிய சில பணவருவாய் மார்க்கங்களும் தனிப்பட்டமுறையில் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதல்லாமல், வேறு எவ்வித நலனுக்கும் சிறிதும் ஏற்றதல்ல என்றே சொல்லுவோம்.

'சுயராஜ்யம் வந்த 3மாத காலத்தில் மனித வாழ்க்கையின் எல்லாத் தரங்களிலும், எல்லாத் துறைகளிலும் நாளுக்குநாள் தொல்லையும் நெருக்கடியும், கோரத்தன்மையும் வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றன. காங்கரஸ் சுயராஜ்ய ஆட்சியின் கையிருப்புத் திட்டங்கள், இன்னும் அதிகமான தொல்லையையும் கோரத்தன்மையையும் விளைவிப்பதற்கு ஏற்றனவாகவே இருந்து வருகின்றன. மக்களது நித்திய வாழ்வுக்கு ஏற்ற ஜீவநாடிகள் அவ்வளவும் சர்க்கார் ஆக்கினையின்கீழ் சிக்கவைக்கப்பட்டு விட்டன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்திய யூனியன் சர்க்காரானது மேலிடத்திற்குச் சர்வ சுதந்தர ஏதேச்சாதிகாரம் அளிக்கும் ஆட்சியேற்பட்டு விட்டதே தவிர மக்களுக்குத், தங்கள் இஷ்டப்படி மூச்சுவிடும் சுதந்தரம் கூட இல்லாத, கொடுங்கோன்மை ஆட்சி ஏற்பட்டுவிட்டது என்று தான் சொல்லவேண்டும். ஆட்சியிலிருப்போரின் நாணயக் குறைவான தன்மையால் சிறிதும் மனிதத்தன்மை அற்ற செல்வர்கள், கள்ளமார்க்கட் வியாபாரிகள் ஆகியவர்களுக்குத் தங்கள் இஷ்டம்போல் கொள்ளையும் உயர் வாழ்வும் வாழும்படியான வசதி ஏற்பட்டிருப்பதும், ஏழைமக்களுக்கும் பாட்டாளி மக்களுக்கும் சொல்லவே உள்ளம் நடுங்கும் கொடுமைகள் இருந்துவருவதும் தான் இன்றைய சுயராஜ்யம் என்று சொல்லிவிடலாம்.

ஜனநாயகம் என்று சொல்லப்படும் இந்த ஆட்சி முறையானது மக்களுக்கும் ஆட்சியாளருக்கும் எவ்வித சம்பந்தமும், அறிமுகமும்கூட இல்லாத தன்மையும்; ஆட்சி சிப்பந்திகளுக்கும் மக்களுக்கும் லஞ்சம் வாங்கும் போது கொடுக்கும் போது தவிர மற்றபடி எந்தக் காரியத்துக்கும் எந்தக் காலத்திலும் எவ்விதச் சம்பந்தமும் இல்லாத தன்மையுமான சுதந்தர ஜனநாயகம் என்றே சொல்லலாம். இந்த லட்சணத்தில் இருக்கும் சுயராஜ்யத்தை அடைந்த காங்கரசார் தாங்கள் இப்படிப்பட்ட பதவி பெறுவதற்கும், தங்களின் இவ்வித நடைமுறை வெளியாகாமலிருப்பதற்கும் தடையாயுள்ளவர்கள் மீது பழிவாங்கும் தன்மையைப்பிரயோகிக்கத் துணிந்து விட்டார்களானால், அது யோக்கியமான மக்களுக்கும் குடிகளுக்கும் எவ்வளவு தொல்லையாய், துன்பமாய், சள்ளையாய் சங்கடமாய் இருக்கும் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. வரி, வட்டம், லஞ்ச அளவு வளர்ந்து கொண்டே போகிறது. அதன் கூடவே மக்களுக்கு வாழ்க்கைக் கஷ்டமும் தரித்திரமும் போட்டி போட்டுக்கொண்டுவளருகின்றன. இவைகளைப்பற்றிய சிந்தனை சிறிதாவது ஆட்சியாளருக்கு இல்லாமல், மேலும் மேலும் அடக்குமுறைச் சட்டங்களை எந்த எந்த வகையில் ஏற்பாடு செய்து மக்களை அடக்கி ஆளுவது என்கின்ற தன்மையில் தினம் ஒரு சட்டம் செய்யப்படுகிறது. தினம் ஒரு உரிமை பிடுங்கப்படுகிறது. தினம் ஒரு பழிவாங்கும் உத்தரவு தோன்றி வருகிறது.

இந்தக் கூட்டத்தார் (காங்கரசார்) பதவிக்கு வருமுன் மக்

## பெரியார்

ஈரோடு, நவ. 22—

பெரியாரவர்கள் இன்றிரவு இங்கிருந்து புறப்பட்டுக் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

23-11-47 துறையூர்
24— வாடிப்பட்டி
25— கந்தருவக்கோட்டை
26— கூத்தாநல்லூர்
27 } ஈரோடு அல்லது
28 } சேலம்
29— திருப்பத்தூர்
30— வாணியம்பாடி
1-12-47 சென்னை.

## அது போதாது!

★

திராவிடர் கழகத்தில் நீங்கள் உறுப்பினராகச் சேர்ந்து விட்டால், அதுமட்டும் போதாது.

உங்கள் குடும்பத்திலுள்ள வயதுவந்த எல்லா ஆண் பெண் இருபாலரையும் உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டும்!

உங்கள் தெருவிலுள்ள, வட்டாரத்திலுள்ள ஆண் பெண் இருபாலருக்கும் கழகத்திட்டங்களை விளக்கிக்கூறி முழு மனதுடன் ஒத்துழைக்க உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டும்.

அவ்வாறு செய்தீர்களா?

களுக்குத் தாங்கள் பதவிக்கு வந்தால் எந்த மாதிரியாக ஆட்சி இருக்கும், என்ன என்ன நலம் செய்வோம் என்று சொன்னார்களோ, அந்த மாதிரிகளையும் அந்த நலன்களையும், இவர்கள் பதவிக்கு வந்த பிறகு எந்த மாதிரி ஆட்சி நடக்கிறதோ என்ன நலம் செய்யப்பட்டதோ அவைகளையும் உள்ளபடி சற்று கவலையோடு நடுநிலைமையில் இருந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய்ப் பொது மக்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக "அரசியல் நிர்ணயசபை மெம்பர்களே, இந்தியச் சட்டசபை மெம்பர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது" என்று இந்திய சர்க்கார் தீர்மானித்து விட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. இது எவ்வளவு அநீதியான—சர்வாதிகாரமான காரியம்? அரசியல் நிர்ணயசபை மெம்பர்கள் யார்? அவர்கள் மேலிடத்துக்காரர்களால் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்பதல்லாமல் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் சட்டசபை மெம்பர்கள் ஓட்டுக்கும் எந்த விதத்தில் சம்பந்தம் இருக்கிறது? அரசியல் நிர்ணய சபை மெம்பர்கள் தேர்தல் என்பதில், மாகாண சட்டசபைகள் மேலிடத்தார் குறித்தனுப்பிய பேர் வழி லிஸ்ட்டு என்பதை, ஆக்கினையின் பேரில் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியவர்களானார்கள் என்பதைத் தவிர அதில் நடந்த தேர்தல் தன்மை, நாணயம் என்ன என்று யாராவது சொல்ல முடியுமா? இதுதான் இருக்கட்டும். காங்கரஸ் மகாசபையின் காரியக்கமிட்டி என்பதுதான் என்ன என்று பார்த்தால் அவர்கள் அத்தனைபேரும் தலைவரால் நியமிக்கப்பட்டவர்கள் அல்லது, தாங்களே நியமனம் செய்து கொண்டவர்கள் என்பதைத் தவிர, மற்றபடி அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அல்லது அகில இந்திய காங்கரஸ் கமிட்டி மெம்பர்களுக்குமாவது ஏதாவது நியமனத்தில் உரிமையோ சம்பந்தமோ அறிமுகமோவாவது உண்டு என்று சொல்ல முடியுமா? இதற்குப் பெயர்தான் ஜனநாயகம் என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி மற்றொரு சமயம் விளக்கலாம்.

சென்னைச் சர்க்கார் நேற்றுத் திடீரென்று வகுப்புவாரி உத்தியோக வினியோகத்திட்டத்தில் ஒரு மாறுதல் செய்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இதன் யோக்கியதை என்ன என்று பார்த்தால் பழிவாங்குவது என்பதைத் தவிர வேறு ஒன்றும் காண முடியவில்லை. அந்தச் செய்தி உண்மையாய் இருக்குமானால் ஆதிதிராவிடத் தோழர்களுக்கு 12ல் ஒரு உத்தியோகமாக இருந்ததைப் பதினான்கில் இரண்டாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் முஸ்லிம்களுக்கு 12ல் இரண்டு உத்தியோகமாக இருந்ததைத் திடீரென்று பதினான்கில் ஒன்று என்பதாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆதித்திராவிடருக்கு 100க்கு 8 ஸ்தானமாக இருந்தது இப்போது 100க்கு பதினான்காக இருக்கிறது. ஆனால் முஸ்லீம்களுக்கு 100க்கு 16 ஸ்தானம் இருந்ததானது 100க்கு 7 ஸ்தானமாக ஆகிவிட்டது. இந்தப்படி குறைத்ததற்கு காரணம் என்ன? என்ன கொள்கையின் மீது குறைக்கப்பட்டது? 100க்கு 3 பேர்களாய் இருக்கும் பார்ப்பனர்களுக்கு 14 ஸ்தானம் ஏன்? 100க்கு 3 பேர்களாய் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு 100க்கு 7 ஸ்தானம் மாத்திரம் ஏன் ஒதுக்கப்படவேண்டும்? இது "நம் வசம் ஆட்சியும் ஆதிக்கமும் இருக்கிறது, நாம் எப்படிச் செய்தாலும் நம்மைக் கேட்பவர்கள் யார்?" என்கின்ற அகம்பாவ ஆணவமான சுயராஜ்ய ஆட்சி காரணமல்லாமல் மற்றபடி வேறு காரணம் என்ன சொல்ல முடியும்? அதே சேதியில் "பிராமணரல்லாதாருக்கு 100க்கு 56 பார்ப்பனருக்கு 100க்கு 14 என்று தெரியக்கிடக்கின்றது. இது அதாவது 100க்கு 75 பேர்களாய் உள்ள பார்ப்பனரல்லாத மக்களுக்கு 56 என்பதும் 100க்கு 3 பேராய் உள்ள பார்ப்பனருக்கு 100க்கு 14 என்பதுமாய் இருந்தால் இதற்கு, இந்த ஆட்சி பார்ப்பன ஆட்சியாய் இருப்பதால்தான் இப்படி என்பதைத் தவிர வேறு காரணம் என்ன சொல்ல முடியும்? அதுவும் வகுப்பு உணர்ச்சி, வகுப்புக் கலவரம், வகுப்பு அவநம்பிக்கை உள்ள இந்தக் காலத்தில், சுயராஜ்யம் வந்தவுடன் இப்படிச் செய்வது யோக்கியமான காரியமாகுமா?

மற்றும் அந்தச் சேதியில் "முஸ்லீம்கள் சில சர்விஸ்களில் அதிகமாகி இருப்பதால் மேற் குறிப்பிட்ட வகுப்புவாரி விகிதத்துக்குச் சரியாக நிலைமை வரும் வரை முஸ்லீம்கள் நியமிக்கப்படமாட்டார்கள்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (இது சுதேசமித்திரன் 20-11 தேதி இதழ் என்பதில் 2ம் பக்கம் 5ம் கலத்தில் இருக்கிறது.)

ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கத்தில் இருந்த காலத்தில், பார்ப்பனரல்லாத மக்கள் தங்களுக்கு விகிதாச்சாரப்படி உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்றும்,

அந்த விகிதாச்சாரம் பார்ப்பனரல்லாதாருக்கு வரும் வரை பார்ப்பனருக்கு உத்தியோகம் வழங்கப்படாதென்றும், எவ்வளவோ கூப்பாடு போட்டும் ஜஸ்டிஸ் கட்சியார் அதைப்பற்றிச் சிறிதுகூடக் கவலையில்லாமல் அந்த 100க்கு 16 விகிதத்துக்கு மேலாகவும் பார்ப்பனர் உத்தியோகத்தில் இருப்பதை விட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது பார்ப்பனர் தங்களைப்பற்றிய கொள்ளை அடிக்கும் தன்மையை விட்டு விடாமல் திடீரென்று இந்நாட்டுப் பழங்குடி மக்கள் மீது பாய்ந்து பழிவாங்குகிறார்கள். திறமை தகுதி பார்த்து, இந்த விகிதம் ஏற்படுத்தி இருப்பார்களானால் ஆதித்திராவிடருக்கு 100க்கு 14 வழங்க முடியுமா? அந்த அவர்களுக்கு உள்ள "திறமை தகுதி" கூட முஸ்லிம்களுக்கு இல்லையா? அல்லது எண்ணிக்கை பார்த்துச் செய்ததாகச் சொல்லுவார்களானால் பார்ப்பனருக்கு 14 ஸ்தானம் தகுமா? என்று கேட்கின்றோம்.

இதைப் பார்க்கும் போது இனி இந்த ஆரிய ஆட்சி முஸ்லிம், கிருஸ்தவர்கள் அல்லாத திராவிட மக்கள் தலையிலும் கையை வைத்துப் பழிதீர்க்கும், அடக்கும், ஒடுக்கும், நசுக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

முஸ்லிம்கள்மீது இந்தச் சமயம் முஸ்லிம் அல்லாத திராவிடர்களுக்குச் சற்று அதிருப்தி முன்னிலும் அதிகமாக இருந்து வருவதாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொள்ளுகிற ராஜதந்திரம் என்னும் தன்மைதான் என்று சொல்லவேண்டும். அவர்களிடம் தற்கால நிலைக்கு ஏற்றபடியான ஒரு திட்டமான போக்கு இல்லை. காங்கரசாருக்கு நல்லபிள்ளைகளாக நடக்கவே பெரிதும் ஆசைப்பட்டு மற்ற திராவிட மக்களை அலட்சியப்படுத்துகிறார்கள், வெறுக்கிறார்கள். இந்த வெறுப்பைக் காட்டிக் கொள்வதன்மூலமே காங்கரசுக்கு நல்லபிள்ளை ஆகப் பார்க்கிறார்கள். காங்கரஸ் நிர்வாகக் கொடுமையில் இருந்து தாங்கள் மாத்திரம் தப்பினால் போதுமென்று கருதிக்கொண்டு மற்ற திராவிடமக்களைப்பற்றி கவலைப்படுவதில்லை. அவர்களோடு கலந்திருப்பதாகக் காட்டிக்கொள்ளக்கூட பயப்படுகிறார்கள். தங்களைத் தவிர மற்றவர்கள் அடையும் கொடுமையைப் பற்றிச் சட்டசபையிலுள்ள முஸ்லிம்கள் ஒரு கேள்வியாவது இதுவரை கேட்டவர்கள் அல்ல. திராவிடக்கழக சம்பந்தமாக எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்ள நடுங்குகிறார்கள். சேலம் முதலிய இடங்களில் காந்தி ஜயந்தி முதலியவைகளுக்குக் காங்கரசுடன் சேர்ந்து கோவிந்தா போட்டார்கள். ஈரோடு முதலிய பல இடங்களில் முனிசிபல் தேர்தலில் காங்கரசுக்கு வலிய ஆதரவளிக்க மேல் விழுந்து சென்றார்கள். திராவிடக் கழகத்தை வெறுக்கிறவர்களாகவும் காட்டிக்கொண்டார்கள். சில இடங்களில் காங்கரசில் சேர்ந்து கொள்ளலாம் என்றுகூட ஆசைப்பட்டதாகத் தெரிகிறது. வேறுபல இடங்களில் இருந்தும் இதுபோன்ற இன்னும் பலமான புகார்கள் வருகின்றன. இந்தக் காரியங்களால் காங்கரஸ்காரர்கள் முஸ்லிம்கள் பயந்துவிட்டார்கள், இவர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று கருதிவிட்டரென்று இவ்வளவு பெரிய காரியத்தில் துணிகரமாய்ப் பிரவேசித்து இப்படியான காரியங்களைச் செய்யத் துணிந்துவிட்டார்கள். இன்றைக்கு முஸ்லிம்களுக்கு வந்ததுதான் நாளைக்கு, திராவிடர்களுக்கு வரப்போகிறது. தோழர்கள் உபயதுல்லா சாயபு, அப்துல்பிச்சை சாயபு முதலிய தேசபக்த தேசிய முஸ்லிம்கள் காங்கரசில் இருந்தும், இப்படிப்பட்ட பழிவாங்கும் காரியங்களை எப்படித் தடுக்கமுடியவில்லையோ அப்படித்தான் தோழர்கள் ஓமந்தூரார், அவினாசியார், ராமாஜர்களான தேசபக்தத் தேசியவாதிகள் இருந்தும் திராவிடர் நிலை மிக்க ஆபத்தான தன்மைக்குப் போய்ப் போகிறது.

இந்தச் சமயத்திலாவது முஸ்லிம் தலைவர்கள் ஆண்மையோடு துணிவானதாவது ஒரு போக்கைக் கைக்கொள்ளுவார்களா? தலைவர்களுக்குதாட்சண்யம் தன் காரியம், பயம் முதலியவை இதற்கு ஒருசமயம் குறுக்கிட்டாலும் முஸ்லீம் பொதுமக்களாவது கூடித்தங்கள் போக்கை நிச்சயித்து இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் தடுப்பார்களா? என்பது முக்கியமான காரியமாகும். இந்தப்படியே திராவிடமக்கள் மதம், ஜாதி, தேசியம் முதலான காரியங்களால் பிரிக்கப்பட்டு விட்டால், பூனைகளின் சுயராஜ்ய காலத்தில் எலிகளின் நிலைமை எப்படி இருக்குமோ அப்படித்தான் ஆரியர் சுயராஜ்ய காலத்தில் திராவிடர் நிலை இருக்க முடியும்.

ஆகவே இந்தச் சுயராஜ்யம் ஆபத்தான சுயராஜ்யமே ஆகும்.

---

# இராமாயணம்

(பெரியார் ஈ. வெ. ரா.)

வால்மீகி இராமாயணம் என்னும் பெயரால் வழங்கி வரும் ஒரு இதிகாசக்கதையை நாடக ரூபமாய் என்னால் வெகு நாளைக்கு முன்பாகவே தொகுக்கப்பட்டிருந்ததை "குடி அரசி"ல் இவ்வாரம் முதல் "உண்மை இராமாயணம்" என்னும் தலைப்பில் தொடர்ச்சியாய் வெளியிட எண்ணி முதல் இருகாட்சிகள் இவ்விதழில் வெளியாக்கப்பட்டிருக்கின்றன.

இதைப்படிக்கும் அன்பர்கள் இராமாயணத்தைப்பற்றிய சில கருத்துக்களை மனதில் பதிய வைத்துக்கொண்டு படித்துவர வேண்டுமாய் ஆசைப்படுகிறேன்.

1. இராமாயணம் நடந்த கதை அல்ல.
2. அல்லது இராமாயணம் தெய்வீகத்தன்மை பொருந்திய ஒரு கற்பனைக்கதையுமல்ல.
3. அது இன்றைய நிலைக்கு மனித வாழ்வுக்கு ஒரு வழி காட்டியாய் உள்ள நீதிநூலும் அல்ல.
4. அது பகுத்தறிவிற்கும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் ஏற்ற சித்திரிப்பும் அல்ல.

என்பன நமது கருத்தாகும்.

இந்த நமது கருத்தானது நமது பண்டிதர்களாகிய பல பெரியோர்களும் உதாரணமாக பா. வெ. மாணிக்க நாயக்கர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், சாமி

வேதாசலம், கா. சுப்பிரமணிய பிள்ளை, சோமசுந்தர பாரதியார், கதிரேசம் செட்டியார், டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மு. சுப்பிரமணிய பிள்ளை முதலாகிய பல தமிழ்ப் பெரும் புலவர்களான பெரியார்களும் சொல்லிய கருத்துமாகும். மற்றும் "கலியுகக் கம்பர்" என்று பார்ப்பன அரசியல், மத இயல், பத்திரிகை இயல்களில் பிரசித்திபெற்ற, பார்ப்பனர்களால் கொண்டாடப்படும் தோழர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுடைய கருத்துமாகும். இக் கருத்துக்களில் சில அநேக பார்ப்பன அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையுமாகும். மற்றும் நம் தமிழ்நாடு மாத்திரமல்லாமல் வெளி நாட்டிலும் மேல் நாட்டிலுமுள்ள பல ஆராய்ச்சியாளர்களது முடிவுமாகும்.

நம்மைப் பொருத்த வரை இராமாயணம் என்ற கதையைப்பற்றி மேலும் சொல்ல வேண்டுமானால், இராமாயணம் என்பது சைவ பரமாயுள்ள கந்தபுராணக் கதையையே பிரதி ஆக்கி (காப்பி அடித்து) அதே கதைப் போக்கை அடிப்படையாக வைத்து வைணவ பரமாய், கந்த புராண காலத்துக் காட்டுமிராண்டித் தன்மையை விடச் சற்று நாகரீகமாக சித்திரிக்கப்பட்ட சித்திரம் என்பதாகும். அதுவும் பாகவதத்தில் உள்ள இராமாவதாரம் என்கின்ற ஒரு முண்ட உருவத்துக்குக் கண், மூக்கு வைத்து முழு உருவாக்கிய சித்திரம் என்றே சொல்லலாம். உதாரணம் சொல்லவேண்டுமானால் இந்த இராமாவதாரத்திற்கு இராமாயணத்தில் உள்ளபடியான கதைப் போக்கு முழுவதும் பாகவதத்தில் காண முடிவதில்லை. அதாவது பெரிய புராணத்தில் எப்படி திருத்தொண்டர் தொகையில் கண்ட "இல்லையே என்னாத இயற்பகைக்குமடியேன்" முதலிய வரிகளை வைத்துக் கொண்டு சேக்கிழார், இயற்பகை நாயனார் முதலிய நாயனார் கதைகளைச் சித்திரித்து விட்டாரோ அதுபோல்தான், இராமாவதாரம் என்கின்ற ஒரு குறிப்பை வைத்துக்கொண்டு மற்ற சங்கதிகளுக்கு கந்த புராணப் பாத்திரங்களையும் போக்கையும் பெயர்மாத்திரம் மாற்றி அக்காலத்திலுள்ள நாகரிகத்திற்கு ஏற்றபடி கதையைச் சித்திரித்தார் என்பதாகும். (இதற்கும் ஆதாரம் வேண்டுமானால் அறிஞர் ஆர். பி. சேதுபிள்ளை அவர்கள் ஆக்கிய "வேலும் வில்லும் என்னும் நூலைப் பார்த்துக் கொள்ளலாம்) அக்கதையை வால்மீகி என்பவர் (இராமாயணம் என்னும் வேறு பெயரால்) சித்திரிக்கின்ற போது இராமனைக் கடவுளாக்க வேண்டுமென்றோ அல்லது, இராமனை மேலான ஒரு உயர்குணப் பிறவியாக சித்திரிக்கவேண்டுமென்றோ அதிகக் கவலைகொள்ளாமல், போன போக்கில் கந்த புராணப் போக்கிற்கு ஏற்றது போலவே சித்திரித்து இருக்கிறார். இராமாயணத்தில் இராமனுக்கும் மற்றும் அவனைச் சேர்ந்த பாத்திரங்களுக்கும் வால்மீகி எவ்வளவித மான ஒழுக்க மற்ற, இழி தன்மைகளையும் ஒரு சாதாரண "ராஜா மந்திரி" பாட்டிக் கதைகளுக்கு ஏற்றபடி சித்திரித்திருப்பது போலவே சித்திரித்து இருக்கிறார். உயர்குணம், இழிகுணம் என்பவைகளைத் தசரதன் வசிஷ்டர் தசரதன் மனைவிமார் இராமலட்சுமணர்கள், சீதை, ரிஷிகள், தேவர்கள், தேவேந்திரன், அனுமான், விபீஷணன் என்பவர்களான எல்லோர் விஷயத்திலும் எதிர்க்கட்சிக்காரர்களாகிய இராவணன் கும்பகர்ணன், இந்திரஜித்து, மண்டோதரி முதலியவர்கள் விஷயத்திலும் சற்றேறக்குறைய ஒன்றுபோலவே சிருஷ்டித்திருக்கிறார். உதாரணமாக இருகூட்டத்தாரும் மாமிசம் உண்டு, மது அருந்தி இருக்கிறார்கள். இரு கூட்டத்தினரும் வஞ்சகமாக தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இரு கூட்டத்திலுள்ள பெண்களும் கீழ்த்தரமாக நடந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதோடு இரு கூட்டத்திலும் எல்லாவிதக் கூடா வொழுக்கங்கள் என்பவைகளும் சாதாரணமாக நடந்ததாகவே சித்திரித்துவிட்டார் வால்மீகி.

சுருங்கச் சொல்லவேண்டுமானால் வால்மீகி, ஒருவரையாவது கடவுள் தன்மை என்பதற்காக முழு யோக்கியராகவோ, ராட்சதத்தன்மை என்பதற்காக முழு அயோக்கியனாகவோ சித்திரித்து விடவில்லை. வால்மீகி கதையின்படி பார்த்தால் இராவணன் (இராட்சதர்) கூட்டத்தாரை, குறை கொண்ட மக்களாக ஆக்கியதைவிட இராமன் (கடவுள் தேவர்) கூட்டத்தாரையே அதிகக் குறை கொண்ட மக்களாகச் சித்திரித்திருக்கிறார். ஏன் இப்படிச்சொல்லுகிறோமென்றால் கெட்டவர்களாகச் சித்திரிக்கவேண்டியதற்கு அவசியமாக ஏற்பட்ட பாத்திரங்களைப்பற்றி இழிதன்மை புகுத்துவதும், நல்லவர்களாகச் சித்திரிக்க வேண்டிய பாத்திரங்களுக்கு இழிதன்மையைப் புகுத்துவதும் இரண்டும் சம நோக்குடைய காரியம் என்று சொல்லிவிட முடியாது. உதாரணமாகத் திருடனாகக் கற்பிக்கும் பாத்திரத்தின் மீது "திருடன் பொய் சொன்னான்" என்று அவன்மீது 'பொய் கூறுதலாகிய" குற்றச்சாட்டை ஏற்றலாம், ஆனால் ஒரு நல்ல நியாயதிபதியாகக் கற்பிக்கும் பாத்திரத்தின் மீது லஞ்சம் வாங்கினான் என்ற நாணயக்குறைவை ஏற்றாவிட்டாலும் "இந்த உயர் தன்மை பூண்ட நியாயதிபதி சிபார்சை ஏற்றுக்கொண்டு தவறாகத் தீர்ப்பளித்தான்" என்று சொல்லப்பட்டால் அது நியாயதிபதியைக் குறைகூறவே சித்திரித்த சித்திரமாகும் அல்லவா? அதுபோல் வால்மீகி இராமாயணக் கதை என்பதில் இராவணன் ('கெட்டவர்கள்" என்ற) கூட்டத்தாரைவிட இராமன் ("நல்லவர்கள். தேவாம்சம் பொருந்தியவர்கள்" என்ற) கூட்டத்தாரையே அதற்குத் தகுதியற்ற முறையில் அதிகமான கீழ் மக்களாக ஆக்கியிருக்கிறார்.

இராவணனுக்கு 100 குறைகள் சொல்லி ஒரு மேன்மையைக் கற்பித்துவிட்டால் அதுவே போதுமானதாகும், படிப்பவர்களுக்கு "இராவணன் முழுதும் அயோக்கியனல்ல" என்பதற்கும்; "அவனிடமும் சில நல்ல குணங்களும் இருந்தன" என்பதற்கும்?

அதுபோலவே இராமன் சீதை முதலியவர்கள் விஷயத்திலும் 10-நல்ல குணங்களை ஏற்றி ஒன்றிரண்டு தீய குணங்களை ஏற்றி விட்டாலும் அதுவே போதுமான

தல்லவா, இராமன் சீதை முதலியவர்கள் விஷயத்திலும் "இராமனாதியர்கள் முழுவதும் யோக்கியமானவர்கள் அல்ல" என்பதற்கும் "அவர்களிடமும் சில அயோக்கியத்தனங்கள் இழி குணங்கள் இருந்தன" என்பதற்கும்.

ஆகையால் உண்மையில் வால்மீகி இராமாயணமானது இராமனது கடவுள் தன்மையை உலகினோர் மறுப்பதற்கும் தேவர்கள் தன்மையை உலகினோர் இழிவாகக்கருதுவதற்கும், அரக்கர்கள் இராட்சதர்கள் என்பவர்கள் தன்மையை இந்து சாஸ்திரங்கள் புராணங்கள் ஆகியவை வெறுத்து இழித்துக்கூறும் அளவுக்கு, இழிவு படுத்தாமல் மேன்மைப் படுத்துவதற்கும் சித்திரிக்கப்பட்டதாகும் என்று கொள்ளத்தக்கமுறையில் இராமாயணம் இருக்கிறது என்றால் இதைச் சுலபத்தில் யாரும் மறுக்கமுடியாது. இக்கருத்தை நாமும் 30, 40, ஆண்டுகளாகவே சொல்லி வருகிறோம்.

அதற்கேற்பவே அடிக்கடி நாம் வால்மீகி இராமாயணத்தை எடுத்துக்காட்டியே ஆரியத்தின் இழி தன்மையை மெய்ப்பித்தும் வருகிறோம். மாணிக்க நாயக்கர் முதலிய பல அறிஞர்களும் அப்படியே செய்து வந்திருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் இந்தக் கோட்பாட்டிற்கு ஆதரவாக மற்றொரு சங்கதியையும் சொல்லுகிறோம். அதாவது கம்பராமாயணம் என்பதாகவும், துளசிதாஸ் ராமாயணம் என்பதாகவும் தமிழிலும், இந்தி மொழியிலும் இராமாயண மொழிபெயர்ப்பு என்னும் பெயரால் உண்டாக்கப் பட்டதற்குக் காரணமே, முக்கியமானதும் முதலாவதானதும் வால்மீகி இராமாயணத்தால் ஆரியத்திற்கு இழிவு—ஆட்சேபிக்க முடியாத இழிவு ஏற்பட்டு விட்டதால் அதை மறைத்து, மக்களுக்கு இராமாயணம் மாத்திரமல்லாமல், இராமன் மாத்திரமல்லாமல், இராமனைச் சேர்ந்த பாத்திரம் மாத்திரமல்லாமல், ஆரிய இனத்தன்மை இழிவையும், ஆரியக் கடவுள் தன்மை இழிவையும் மறைப்பதற்கு ஆகவே செய்யும்படி செய்யப்பட்டவையாகும்.

எனவே இந்த லட்சியத்தை வெளியாக்க வேண்டியேதான் இராமாயணத்தில் இராமனுக்கும் இராமன் கூட்டத்தாருக்கும் வால்மீகி வெளிப்படையாய் வைத்துள்ள இழிவையும், புதைத்து மறைத்துள்ள இழிவையும் நாம் எடுத்துக் காட்டி வருவதாகும். அதுமாத்திரமல்லாமல் கம்பன் என்னும் ஒரு திராவிடன், ஆரியருக்குத் திராவிடரைக் காட்டிக் கொடுப்பவனாய் இருந்து வால்மீகியில் உள்ள ஆரிய இழிவை மறைத்துத் திராவிடருக்கு இல்லாத இழிவைக் கற்பித்து, இனத்துரோகம் செய்த கடை இழிவுத் தன்மையையும், அப்படிப்பட்ட கம்பனை அதற்காகப் போற்றும் அறிவிலிகளையும் கண்டித்து வருவதுமே தவிர வேறொன்றும் இல்லை.

அதுபோலவே (கம்பனைப்போலவே) தன் வடநாட்டில் துளசிதாசர் என்ற கவியால் இந்தியில் இராமாயணம் பாடச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நாம் இராமனை, வால்மீகி இராமாயணத்தில் உள்ளபடி குறை கூறினால், காந்தியார் உள்பட தந்திரக்காரர்கள் "நான் வால்மீகி இராமனைப்பற்றியோ சீதையைப்பற்றியோ சொல்லவில்லை. கம்பனின் இராமனையே சொல்லுகிறேன். துளசிதாசர் ராமனையும் சீதையையும் பற்றியே சொல்லுகிறேன்" என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

எனவே "உண்மை இராமாயணம்" என்ற பெயர் கொண்டு சித்திரிக்கும் இந்நாடகத் தொகுப்பானது வால்மீகி இராமாயணத்தையே முக்கிய ஆதாரமாய்க்கொண்டு அதற்குக் காரணமான புராண தத்துவங்களையும் ஆரியக் கருத்துக்களையும் துணை ஆதாரவாய்க் கொண்டு எழுதப்படுவதாகும்.

ஆதலால் இதைப்படிப்பவர்கள் கேட்பவர்கள் நடிப்பவர்கள் பார்ப்பவர்கள் ஆகியவர்களும், கம்ப இராமாயணத்தையும் துளசிதாஸ் இராமாயணத்தையும் ஞாபகப் படுத்திக்கொள்ளாமல் வால்மீகி இராமாயணத்தையும், இராமன் விஷ்ணு பற்றிய புராண உண்மைகளையும் ஆரியவேத சாஸ்திர இதிகாசக் கருத்துக்களையும் மனதில் வைத்துக் கொண்டு கொள்ள வேண்டியதைக் கொண்டு தள்ள வேண்டியதைத் தள்ள வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

---


## மணமகள் தேவை

F. A. படித்த, உயர்தர, நிரந்தர உத்தியோகம் வகிப்பவர் ஒருவருக்கு, சீர்திருத்தத் திருமணத்திற்கிசைபவரும், கட்டழகும், சிவந்தமேனியும், நற்குடிப் பிறப்பும், நல்லொழுக்கமுமுடைய Secondary Grade or S. S. L. C. படித்து நர்ஸ் பயிற்சி பெற்றுள் or கல்விச் செல்வத்துடன் விலங்கமில்லா பொருட் செல்வத்தை தனக்கென உரிமை கொண்ட பால்ய விதவை or கன்னியாம் ஓர் இந்து மணமகள் தேவை. வயது, ஜாதக முதலிய விவரங்களுடன் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

A. T. C/o

(A-2) குடி அரசு ஈரோடு.


---

(6ம் பக்கத்தொடர்ச்சி)

தேசசேவையில் முன்னணியில் இருந்து வரலாம்.

"டாக்டர் வரதராசுலு நாயுடு"

சுயநலம் ஜாதிப்பற்று ஆகியவைகளை வளர்த்துவரும் பிராமணாள் ஹோட்டல்களையும் நேருவின் படங்களையும் பார்த்தபிறகுமா, இவ்வாறு டாக்டர் ஆலோசனை கூறுகிறார் என்று எச்சில் பிளேட்டுகளை எடுத்துப் போடும் இருளாண்டி சிரிப்பாய்ச் சிரிக்கலாமல்லவா?

o o

● சுதந்திரநாள் நினைவாக "ஜெய் ஹிந்த் தபால் ஸ்டாம்புகள் நவம்பர் 21, டிசம்பர் 25 ஆகிய நாட்களில் வெளியிடப்படும். மூன்று சிங்கம், அசோக சக்கரம் $1\frac{1}{2}$ அணா, இந்திய தேசியக்கொடி $3\frac{1}{2}$ அணா, 4-பொறிகள் கொண்ட விமான ஊர்தி 12 அணா என்ற முறையில் முத்திரைகள் இருக்கும்.

'செய்தி".

இந்நாட்டில் இல்லாத சிங்கத்தையும், இந்நாட்டுமக்கள் அனைவரின் ஒப்புதல் பெறாத கொடியையும், விஞ்ஞானத்தை வெறுத்துவிடு என்று போதிக்கும் நாட்டில் விஞ்ஞானத்தின் பிறப்பான விமான ஊர்தியையும், சுதந்திர நினைவாக முத்திரைகளில் அமைப்பதைக் காட்டிலும், தண்டவாளம் பெயர்க்கும் காட்சி $1\frac{1}{2}$ அணா, தந்திக்கம்பிகளை அறுக்கும் காட்சி $3\frac{1}{2}$ அணா, கோர்ட்டுகளைக் கொளுத்துங்காட்சி 12 அணா என்று வெளியிட்டால், பெற்ற சுதந்தரத்தை உண்மையாய் விளக்கிக்காட்டுமல்லவா?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தில் மகாவிஷ்ணு அங்கு வருகின்றார்.]

பிர்மா—தேவர்கள்:- மகாப் பிரபோ! வரவேண்டும்! வரவேண்டும்! கோடி நமஸ்காரம். நல்ல சமயத்தில் எழுந்தருளினீர்கள், எங்கள் பாக்கியமே, பாக்கியம்!

விஷ்ணு:-பிரம்மனே கல்யாண்! தேவர்களே கல்யாண்! என்ன விஷயமாய் இங்கு கூடி இருக்கிறீர்கள்? ஏன் நீங்கள் யாவரும் முக வாட்டமாய் இருக்கின்றீர்கள்?

பிர்மா:- சுவாமின்! இந்தத் தேவர்கள் இராவணனது கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் முறையிட வந்திருக்கின்றார்கள். யாகம், எக்கியம், ஓமம், முதலிய காரியங்கள் நின்று விட்டன. இராவணனும் மற்ற இராட்சதர்களும் மிக்க அக்கிரமம் செய்கிறார்கள். ஆதலால் தாங்கள்தான் அந்த இராவணனையும் அவனது கூட்டத்தையும் அழித்துத் தேவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

விஷ்ணு:- பிரம்மனே! தேவர்களே! பயப்படாதீர்கள். கவலையை விடுங்கள்! நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். நீங்கள் செல்லலாம். (என்று தேவர்களை நோக்கிக்கூறத்தேவர்கள் சென்று விடுகின்றார்கள்.)

பிர்மா:- தந்தையே! இதற்குத் தாங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்?

விஷ்ணு:- மகனே! நான் பூலோகத்தில் மனிதனாகப் பிறக்க வேண்டிய சாபம் மூன்று இருக்கின்றன. அவை கழிந்தாக வேண்டும். அதற்காகப் பூலோகத்தில் மனித அவதாரமெடுத்து இராவணனைக் கொன்று விடுகிறேன்.

பிர்மா:- தந்தையே! அச்சாபங்களைச் சொல்லியருள வேண்டும்!

விஷ்ணு:- சொல்லுகின்றேன் கேள்! 1. நான் பிருகு முனிவரின் மனைவியைக் கொன்று விட்டேன். அதற்கு அந்த முனிவர் என்னை மனிதனாகப் பிறந்து என் மனைவியை இழந்து தவிக்க வேண்டும் என்று சாபமிட்டு விட்டார். 2, ஜலந்திரன் என்னும் ஒரு அசுரனுடைய மனைவி பிருந்தை என்பவள், மிக்க அழகுடையவளாக இருந்ததால் அவள்மீது எனக்குக் காதல் ஏற்பட்டது. எவ்வளவு முயற்சித்தும் அவள் இணங்கவேயில்லை. அதனால் அவள் புருஷனை இறக்கச்செய்து அவனுடலுக்குள் புகுந்து அவனைப் போலவே சென்று அவனுடைய மனைவியை ஏமாற்றிக் கலவி இன்பம் அநுபவித்தேன். இது தெரிந்த பிருந்தை "என் மனைவியை ஒரு அசுரன் எடுத்துப் போய் அநுபவிக்கவேண்டும்; அதனால் நான் வேதனையடைய வேண்டும்" என்று எனக்குச்சாபமிட்டு விட்டாள். 3, ஒரு நாள் மாலை வேளையில் இலட்சுமியோடு கலவி செய்து கொண்டிருந்தேன். சில முனிவர்கள் அந்தச் சமயத்தில் வந்து விட்டார்கள். அது சமயம் நான் கலவி யின்பத்தில் மூழ்கியிருந்தபடியால், கலவியிலிருந்தபடியே அவர்களோடு பேசினேன். அதனால் அம்முனிவர்கள் கோபமுற்று நான் மனிதனாகப் பிறந்து மனைவியை இழந்து விரகதாபப்பட வேண்டுமென்று சபித்து விட்டார்கள்.

இப்படியாக இந்த மூன்று காரணங்களால் ஏற்பட்ட அதாவது 1 மனைவியை இழக்கவேண்டும் 2 மற்றவன் அநுபவிப்பதால் அவமானப்படவேண்டும் 3 விரகதாபப்படவேண்டும் என்ற சாபங்கள் தீர நான் பூமியில் மனிதனாகப் பிறக்கவேண்டியிருக்கின்றது. ஆதலால் நான் ஒரு அரசனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து என் மனைவியை அந்த இராவணனையே எடுத்துப் போகச் செய்து அந்தக் காரணம் வைத்தே அவனையும் மற்ற இராட்சதர்களையும் பூண்டோடு அழித்து விடுகின்றேன்.

பிர்மா:-தந்தையே மிகவும் சரியான காரியம். உடனே முயற்சி செய்யுங்கள்.

விஷ்ணு:- ஆகட்டும் நான் போய் வருகின்றேன். [சரஸ்வதியைப் பார்த்துக் கொண்டே]

பிர்மா:- நமோன் நமஹ! (முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு)

விஷ்ணு:- (தலையை ஆட்டிக் கொண்டே) கல்யாண்! கல்யாண்! (என்று கூறி வெளியேறல்).

# சிந்தனைத் திரட்டு

★

[பெரியார் அவர்கள் பற்பல சந்தர்ப்பங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்து திரட்டிய அரிய சில கருத்துக்களின் தொகுப்பைக் கீழே வெளியிடுகின்றோம். ஆ-ர்]

0 0

நமது புராணக்காரர்களுக்கு பாரதத்தில் திருதராஷ்டிரனும்பாண்டுவும் அவர்களின் தகப்பனுக்குப் பிறந்தவர்கள் அல்ல என்று சொன்னால் யாரும் கோபித்துக்கொள்ளுவதில்லை, ஆனால் ராமாயணத்தில் ராமன் பிறந்தது அவனது தகப்பனுக்கா என்பது சந்தேகமாயிருக்கின்றதென்றால் உடனே கோபித்துக்கொள்ளுகின்றார்கள். இதன் ரகசியம் தெரியவில்லை.

0 0

மார்ச்சுமாதம் 31ந்தேதியின் ரயில்வே கெய்டானது ஏப்ரல் மாதம் 1ந் தேதி பிரயாணத்தில் ரயில் தப்பும்படி செய்து விட்டது. ஆனால் நாம் "திரேதாயுகத்து" கெய்டைப் பார்த்து "கலியுகத்தில்" பிரயாணம் செய்யவேண்டுமென்கின்றோம்.

0 0

பத்துமாதக் குழந்தையைக் கட்கத்தில் வைத்துச் சாமியைக்காட்டி அதைக் கும்பிடு என்று கைகூப்பச் செய்வதைவிட இருபது வருஷத்து மனிதனைப் பார்த்து நீ கடவுளைக் கும்பிடுவது முட்டாள்தனம் என்று சொல்வது குற்றமாகாது.

0 0

மேல்நாட்டானுக்குப் பொருளாதாரத் துறையில் மாத்திரம் சுயமரியாதை வேண்டும். நமக்கு மதம் சமூகம், கல்வி, அறிவு, ஆராய்ச்சி, கைத்தொழில் அரசியல், பொருளாதாரம் முதலாகிய பல துறைகளிலும் சுயமரியாதைவேண்டும்.

0 0

அரசியல் இயக்கம் "முதலில் நாங்கள் இந்தியர்கள். பிறகுதான் பார்ப்பனர்கள், பறையர்கள் என்று பார்க்கவேண்டும்" என்று சொல்லுகின்றது. ஆனால் சுயமரியாதை இயக்கமோ 'முதலில்நாங்கள் மனிதர்கள், பிறகுதான் இந்தியர்கள் ஐரோப்பியர்கள்" என்று பார்க்கவேண்டும் என்பதாகச் சொல்லுகின்றது.

0 0

ஸ்தல புராணங்கள் என்பதெல்லாம் அன்னிய நாட்டு சரித்திரங்களையும் ஆராய்ச்சி சக்திகளையும் அறியும் ஆற்றல் கொண்டதாய் இருக்கவேண்டுமேயொழிய "எவ்வளவு பாபம் செய்தாலும் ஸ்தலத்தின் தூசி மேலேபட்டால் மோட்சத்திற்குப் போகலாம்" என்பதாக இருக்கக்கூடாது.

# மதிப்புரை

★

[மதிப்புரை வேண்டுவோர் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

## கதிரவன்

(மாதமிரு முறை)
ஆசிரியர்: புலவர் பு செல்வராசு.
ஒரு இதழ் ஆறணா.
ஒரு ஆண்டுக்கு ஒன்பது ரூபாய்.
91, பிராட்வே சென்னை—1.

அழகான புறத்தோற்றம், அருமையான அர்த்தம் நிறைந்த பாக்கள், அறிவிற்கு விருந்தான ஆராய்ச்சிகள். அஞ்சாமையைப் புலப்படுத்தும் போக்கு. செந்தமிழ் நடையையும் மரபையும் பேணிய, சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள், கதைகள். ராயல் 1-8 48 பக்கங்கள் கொண்ட புத்தக வடிவம். பத்திரிகை யுலகிலே, திராவிடர்கள் எதிர்பார்த்திருந்த விருப்பம் ஓரளவாவது நிறைவேறும் எனவும் திராவிட மெங்கும் தடையின்றிக் கதிரவன் ஒளி புகும் எனவும் நம்புகின்றோம். திராவிடர்க்குப் பெரும் பணி புரிய முன் வந்திருக்கும் கதிரவனைப் பாராட்டித் திராவிட மக்கள் இதன் வளர்ச்சிக்குப் போதரவு செய்யவேண்டுகின்றோம்.

## இளைஞன்

(மாத வெளியீடு)
ஆசிரியர்: K A. அப்துல்ரஷீத்.
(ஒரு இதழ் ஐந்தணா)
கோட்டை, ஈரோடு.

இளைஞன் இந்து—முஸ்லீம்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பது, பல கட்சியினரிடத்தும் தான் காணும் நல்லியல்பைப் பாராட்டுவது, என்பன போன்ற நோக்கத்தோடு சீர்திருத்த எண்ணம் வாய்ந்த பல இளம் எழுத்தாளர்களின் கட்டுரைகளையும் கதைகளையும் தாங்கிப் பல புகைப்படச் சித்திரங்களையும் அணிந்து கவர்ச்சியான மேலட்டையைப் பெற்று டிம்மி 1-8, 44 பக்கங்களுடன் புத்தக வடிவில் உள்ளது. வரவேற்கத்தக்கது.

## தமிழ் நிலம்

(கிழமை இதழ்)
எழுத்தாளர்: குடியேற்றம் முருகப்ப அண்ணல் தங்கோ.
ஓரிதழ் விலை 0-3-0,
ஓராண்டு விலை 9-0-0,
77, நயினியப்பன் தெரு, சென்னை—1.

கட்டாய இந்தி எதிர்ப்புணர்ச்சி நம் நாட்டில் கரைபுரண்டோடிய நிலைமையை அடிப்படையாகக் கொண்டு வேலூரில் பிறந்த "தமிழ் நிலம்" ஐந்தாண்டு ஓய்விற்குப் பின் மீண்டும் "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தோடு தன்மானக் குரல் எழுப்பிச் சென்னையிலிருந்து வெளிவந்திருக்கின்றது.

பிறசொல் கலவாத தமிழிலே பேசவும் எழுதவும் இயலுமோ? என ஐயப்படுவோர்களுக்குச் செயல் வழியாக விடைகூற வேண்டுமென்ற எண்ணத்தோடு, எத்துறைச் சொல்லையும் என் தாய் மொழியிலேயே கூறுவேன் என்ற உறுதிகொண்டு புரியாத பொது மக்களுக்கும் புரியவைப்பேன் என்ற மனத் திட்டம் படைத்த எழுத்தாளரை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். தமிழ்ப் பற்றுடைய பெருமக்களும் இதனை வரவேற்பார்கள் என நம்புகின்றோம்.

## திருக்குறள் ஆட்சி.

திங்கள் இதழ்: விலை ஐந்தணா.
ஆசிரியர்: அரங்கசாமி.
இராசிபுரம், சேலம்.

வெள்ளையன் போனாலும் இருந்தாலும், நம்நாட்டை ஆண்டதும்—ஆண்டு வருவதும் மனு நீதியை அடிப்படையாகக்கொண்ட "இந்து லா"வே. ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்ற ஓரவஞ்சகமில்லாமல், மக்கட் குலத்திற்கு மனித நீதி ஒரு தன்மைத்தாகவே இருக்க வேண்டுமென்று வற்புறுத்தவும், வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றிலும் திருக்குறள் மணங்கமழச் செய்ய விரும்பியும் உழைப்பது, இதன் நோக்கமென அறிகின்றோம்.

திருக்குறளின் பெருமையை விளக்குவது 82ம் 144ம் என்று நம்பி, அந்த முறையில் பெருமையை விளக்க முற்படுவது, கருதுகின்ற பலன் கைகூடாது [illegible] என்று நினைக்கின்றோம்.

மயிலாப்பூர் கட்டையில், முப்புரி நூலையும், விபூதி பூச்சையும் தள்ளிவிட்டு, திருவள்ளுவருருவம் என்று காட்ட முயலுவது பொருத்தமில்லை. எத்தலைமுறையோ ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தவரின் உருவத்தை, இப்பொழுது கண்டு பிடிப்பது வீண் வேலை.

பொருளுக்காகப் பற்றுவைக்கும் காலம் மலையேறி, பயனுக்காகப் பற்றுவைக்கும் காலம் [illegible] யுணர்ந்து, மக்களுக்குப் பயன்படும் வழிகளில் திருக்குறள் உண்மைகளை விளக்கிவரவேண்டும். இதுவே நமது ஆவல். சிறப்பாகச் செந்தமிழ் நாட்டுச் சிறுவர்கள், தங்களின் மொழியுயர்வைச் செம்மைப் [illegible] கொள்ளவே, பொதுவாகத் தமிழ் பெருமக்கள் திருக்குறளின் சிறப்பையுணர்ந்து கைக்கொள்ளவும் "திருக்குறள் ஆட்சி" உதவி செய்யும் என்பதே நம் நம்பிக்கை.

## தோழன்

(மாத இதழ்)
ஆசிரியர் V. நூர் முகம்மது.
இதழ் ஒன்று 0-4-0
ஆண்டு ஒன்றுக்கு 3-0-0.
25, டாம் வீதி கொழும்பு

இலங்கையில் வாழும் முஸ்லீம்களின் நலனுக்காகப் பாடுபடும் நோக்கத்தைக் கொண்டதெனப் புதுமை ஒன்றின் புரட்சி நாண்கிலிருந்து அறிகின்றோம். கிரவுன் 1-4, 34 பக்கங்களைக் கொண்டதாய்ப் பொருள் நிறைந்த கட்டுரைகள் பல அடங்கி, குறிப்பாக இஸ்லாமிய சமூகத்திற்கு எழுச்சியை யுண்டு பண்ணுகின்ற தென்னலாம்.

## வணிக ஜோதி.

(மாதமிரு முறை)
ஆசிரியர்: கோ. அ. திருஞான சம்பந்தம் செட்டியார்.
தனி இதழ் விலை நாலணா.
வருடச் சந்தா ஆறு ரூபாய்.
நெ. 1. மலைய பெருமாள் தெரு,
சென்னை.

நாம் மூன்றாங்குலத்தவர்களே என்பதைச் சுருதி, யுக்தி, யனுபவ முறைகளால் எடுத்துக் காட்டி முன்னேற்றமடையும் வழிகளைத் தொகுத்து விளக்குதல் தனது 2வது நோக்கம் என்கின்றார் இதன் ஆசிரியர். இவர் கண்டிப்பாக விடாப்பிடியுடன் சாதித்தே தீருவார் எனவும், மக்கள் மக்கள் என்ற ஒரு குலந்தான் என்று கூறினால் ஒப்புக்கொள்ளமாட்டார் எனவும் நம்புகின்றோம்.

வெளிவந்திருக்கும் முதலிதழில், மரபினர்க்குரிய கருடக் கொடியும், வணிக ஜோதியான ஆர். கே. சண்முகம் அவர்களின் உருவப்படமும் முகப்புப் புறத்தை அலங்கரிக்கின்றன. வணிகரின் சிறப்பு பெருமை, பத்திரிகையின் பயன் போன்ற, கருத்துக்கள் உள்ளே காணப்பட்டாலும், ஆசிரியர் கூறுவது போல் என்றும் மூன்றாங் குலத்தவராகவே இருப்பதற்கு ஏற்றவாறு பல கருத்துக்களும் இதனுள் இடம் பெற்று விளங்குகின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன்? தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## வரப்பெற்றோம்.

தேவி. வார இதழ்.
விலை அணா 0-2-0.
ஆசிரியர்: பி. மாலிங்க முதலியார்
நாகர் கோயில்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அதை அறிந்த அவன் மனைவி 'சுவாகாதேவி' என்பவள், அந்த ரிஷிகளின் மனைவிகளைத் தொந்தரவு செய்தால் அவர்களால் தன் கணவன் சபிக்கப்படுவான் என்று எண்ணினாளாம். அதனால் அவள் வசிஷ்டரின் மனைவியாகிய அருந்ததி உருவத்தை மாத்திரம் விட்டுவிட்டு, மற்ற ஆறு ரிஷிகளின் மனைவிமார்களைப்போல் உருவம் கொண்டு, தன் கணவன் ஆசையை நிறைவேற்றினாளாம். இவ்வாறு சுவாகாதேவி கொண்ட ஆறு உருவத்திற்கும் கார்த்திகை என்று பெயராம். இவைகள்தான் கார்த்திகை நட்சத்திரமாக காணப்படுவதாம். இந்த நட்சத்திரப் பெண்கள்தான் 'சுப்பிரமணியன்' என்னுஞ்சாமி, குழந்தையாக இருக்கும்போது அதையெடுத்து வளர்த்தார்களாம்! என்பது ஒரு கதை.

இக்கதையினால்தான் கார்த்திகை நட்சத்திரத்திற்குப் பெருமை. இக்கதை நமது மக்களுக்குக் கற்பிக்கும் மூட நம்பிக்கையைப் பாருங்கள். பிறர் மனைவிமேல் ஆசைப்பட்டு விபச்சாரம் பண்ணுவது குற்றம் இல்லை என்பது ஒன்று. மனைவி தன் கணவன் எந்தத் தகாத காரியத்தை விரும்பினாலும் அதை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்து கொடுக்கும் அடிமைக் கருவியாக இருக்கவேண்டுமென்பது ஒன்று. இவைமட்டுமல்லாமல் இயற்கைப் பொருள்களின்மேல் எல்லாம் 'தெய்வீகம்' என்னும் மூட நம்பிக்கையை உண்டாக்கும் துர்ப்போதனை ஒன்று. ஆகவே இவற்றை ஆராயும்போது இக்கதையும் இதன்மூலம் ஏற்பட்ட விரதம், பண்டிகை முதலியனவும் புரட்டு என்று உணரலாம்.

இனி, இக்கார்த்திகையைப் பற்றிய இரண்டாவது கதையாவது:-

ஒரு காலத்தில் பிரம்மா என்னும் கடவுளும், விஷ்ணு என்னும் கடவுளும் தாம் தாமே ஆதிமூலக் கடவுளர் என்று கூறிக்கொண்டதனால் இருவருக்கும் முதலில் வாய்ச்சண்டை உண்டாகி, பிறகு அது கைச்சண்டையாக மூண்டு ஒருவரோடு ஒருவர் அடிபிடி சண்டை செய்தனராம். அவர்களுடைய சண்டை சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கும் வரவில்லையாம். ஆகையால் அப்பொழுது 'பரமசிவன்' என்னும் 'கடவுள்' அவர்கள் மத்தியில் ஒரு பெரிய 'ஜோதி' உருவத்தோடு, வானத்திற்கும் பூமிக்குமாக நின்றாராம். உடனே சண்டைக்காரக் 'கடவுள்'கள் இருவரும் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார்களாம். அப்பொழுது 'ஜோதி' உருவாக நின்ற 'பரமசிவக் கடவுள்' 'ஏ! பிரம்ம விஷ்ணுகளே! இந்த 'ஜோதி'யின் அடிமுடிகளை யார் முதலில் கண்டு வருகிறாரோ அவர்தான் உயர்ந்தவர்' என்று ஒரு அனாமதேய (அசரீரி) வார்த்தை சொன்னாராம். உடனே விஷ்ணு பன்றி உருவங்கொண்டு அடியைக்காண பூமியைத் துளைத்துக்கொண்டு வெகுதூரம் சென்றும் காணமுடியாமல் திரும்பி வந்துவிட்டாராம். பிரமன் அன்னப்பறவை உருவம் கொண்டு ஜோதியின் முடியைக்காணப் பறந்து மேலே செல்லும்போது வழியில் ஒரு தாழம்பூ வந்து கொண்டிருந்ததாம். அதைக்கண்டு பிரமன் "தாழம்பூவே, எங்கேயிருந்து எவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்க; அது "நான் பரமசிவனுடைய முடியிலிருந்து கோடிக்கணக்கான வருஷங்களாக வந்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்றாம். உடனே பிரமன் "நான் சிவனுடைய முடியைப் பார்த்துவிட்டதாக அவனிடத்தில் எனக்காகச் சாட்சியம் சொல்லுகிறாயா" என்று கேட்க, அதுவும் சம்மதிக்க, இருவரும், பரமசிவனிடம் வந்து முடியைக்கண்டு வந்ததாகப் பிரமன்கூற, தாழம்பூவும் அதை ஆமோதித்ததாம். அதைகண்ட சிவன் கோபங்கொண்டு, இருவரும் பொய் சொன்னதற்காக, "பிரமனுக்கு இவ்வுலகில் கோயில் இல்லாமற் போகக்கடவது" என்றும், "தாழம்பூ இனிமேல் தனக்கு உதவாமல் போகக்கடவது" என்றும் சாபம் கொடுத்தாராம். பிறகு பிரம்மாவும் விஷ்ணுவும் தங்கள் கர்வம் ஒழிந்து பரமசிவனே பெரியவர் என்று எண்ணி இருவரும் அவரை வணங்கி, எங்கள் வழக்கைத் தீர்த்துவைத்ததற்கு அடையாளமாக இந்த மலையின் மேல் ஒரு "ஜோதி" உருவாக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்களாம். 'பரமசிவனும்' அதற்குச் சம்மதித்து "ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகை மாதத்தில், கார்த்திகைப்பண்டிகையில் நான் இந்த மலையின் உச்சியில் ஜோதியாகக் காணப்படுவேன்" என்று சொன்னாராம். இதுதான் திருவண்ணாமலைப் புராணமாகிய அருணாசலப் புராணத்தில் சொல்லப்படும் கார்த்திகைப் பண்டிகைக் கதை.

இந்தக் கதையை ஆதாரமாகக் கொண்டுதான் இன்றும் "சைவப் பெரியார்கள்" என்பவர்கள் சிவன் என்பவரே மற்ற 'கடவுள்'களை விட உயர்ந்தவர் என்று சண்டை போடுகின்றனர். இந்தக் கதையைக் காட்டிச் 'சிவனை' உயர்த்தியும் மற்றவர்களைத் தாழ்த்தியும் பாடாத சைவப்புராணங்களும், தேவாரங்களும், திருவாசகங்களும் தோத்திரங்களும் இல்லை. இதற்கு எதிராக, மற்ற மதத்தினர்கள் எழுதிவைத்திருக்கும் கதைகள் பல. இவ்வாறு மதச்சண்டையை உண்டாக்குவதற்கு இக்கதை முதற்காரணமாக இருப்பதை அறியலாம். இக்கதையில் தாழம்பூ பேசுவது ஒரு வேடிக்கை! 'கடவுள்'களுக்குள்ளேயே சண்டை வந்தது ஒரு விந்தை! இதுபோலவே ஆராய்ந்தால் பரிகாசத்திற்கும் வேடிக்கைக்கும் இடமாக இக்கதையில் அனேகம் செய்திகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு இரண்டு முரண்பட்ட வேடிக்கைக் கதைகளை ஆதாரமாகக்கொண்ட இந்தக் கார்த்திகைப் பண்டிகையினால், நமது மக்கள் மனத்தில் குருட்டுப் பக்தியும், மூடநம்பிக்கையும்; முட்டாள் தனமும் அதிகப்படும் என்பதில் சந்தேகம் உண்டா? இது நிற்க மேலே கூறிய கதைகளில் இரண்டாவது கதையைச் சைவர்கள்தான் 'சிவனுக்கு' பெருமை கற்பிக்கிறதென்று நம்பிக் கார்த்திகைப்பண்டிகை கொண்டாடுகிறார்களென்றால், வைணவர்களும் கொண்டாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. வைணவர்களின் 'கடவுளை' மலந்தின்னும் பன்றியாக்கிக் கேவலப்படுத்தியிருப்பதுடன் சிவனுடைய பாதத்தைக்கூடக் காண முடியாத அவ்வளவு சக்தியற்ற

தெய்வம் என்று இழிவுபடுத்தியிருப்பதை அறிந்தால், அவர்கள் இந்தப் பண்டிகையைப் பெருமையாகக் கொண்டாடச் சம்மதிப்பார்களா? இவர்கள் போகட்டும், ஏதாவது ஒரு கடவுளாவது இருக்கிறார் என்ற நம்பிக்கையில்லாத—தானே கடவுள் என்னும் கொள்கையுடைய ஸ்மார்த்தர்களும் இக்கதையைநம்பிப் பண்டிகை கொண்டாடுகிறார்களே! இதில்தான் என்ன அர்த்தமிருக்கிறது? இவற்றையெல்லாம் யோசிக்கும்போது இவர்கள் முட்டாள்தனம் காரணமாகவாவது, வீண் ஆடம்பரம் காரணமாகவாவது இப்பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டியதிருக்கிறது. அல்லது அறிந்தோ, அறியாமலோ நமது மக்கள் மனத்தில், "பண்டிகைகள் புண்ணிய நாட்கள், அவற்றைக் கொண்டாடுவதால் புண்ணியம் உண்டு. கொண்டாடாவிட்டால் பாவம்" என்னும் ஒரு குருட்டு எண்ணம் குடி கொண்டிருக்கிறது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது.

ஆகவே, இதுபோன்ற பண்டிகைகளால், நமதுநாட்டில் பொருட் செலவும், வறுமையும், மூடநம்பிக்கையும், வீண் காலப்போக்கும் நிறைந்திருப்பதை எடுத்துக்கூறத் தொடங்கிறவர்களுக்கு, உடனே பகுத்தறிவற்ற வைதீக மூடர்கள் "தேசத்துரோகி" "மதத்துரோகி" "வகுப்புவாதி" "நாஸ்தீகன்" என்ற பட்டங்களைச் சூட்டி விடுகின்றனர். சற்றேனும் பொறுமை கொண்டு, சொல்லும் விஷயத்தைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்க்கின்றவர்களில்லை.

இத்தகைய வீண் காரியங்களை ஒழித்து மக்களைப் பகுத்தறிவுடையவராகச் செய்ய இதுவரையிலும் எந்த தேசியத் தலைவர்களாவது, எந்த தேசியத் தொண்டர்களாவது எந்த தேசியப் பத்திரிகைகளாவது முயற்சி யெடுத்துக்கொண்டார்களா? இன்னும் இதுபோன்ற மூட நம்பிக்கைக்கான விஷயங்களை, "சுயராஜ்ஜியம்" "சுதந்தரம்" "காங்கரஸ்" "பாரதமாதா" "மகாத்மா காந்தி" "காந்திஜயந்தி" என்னும் பெயர்களால் பிரச்சாரஞ் செய்து மற்றும் பண்டிகைகளையும், உற்சவங்களையும், விக்கிரகங்களையும் கற்பித்து மக்களை ஏமாற்றிக்கொண்டு தானே வருகிறார்கள். இவ்வாறு தேசிய பிழைப்புக்காரர்கள் ஒரு புறமும், பண்டிகையில் நம்பிக்கையுள்ள வைதீக மூடர்கள் ஒரு புறமும், பணம் சேர்க்க ரயில்வே கம்பெனிக்காரர்கள் ஒருபுறமும் புராணப்பிழைப்புக்காரர்களும், குருக்கள்மாரும் புரோகிதர்களும் மற்றொரு புறமும் பண்டிகைப் பிரசாரம் பண்ணினால் மக்களுக்குப் பகுத்தறிவு விளங்குவது எப்பொழுது?

தாய்மார்களே! வீட்டிற்குத் தலைவியர்களாய் இருக்கும் நம் கையிலேதான், உண்மையில் பண்டிகை கொண்டாடுவதும் கொண்டாடாமல் இருப்பதும் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். பண்டிகைகளை—அர்த்தமில்லாமல் ஆபாசம் நிறைந்திருக்கின்ற கதைகளை நம்பி, நாமும் மடமைக்காளாகி நமது வருங்காலச் சந்ததியையும் மடமையில் ஆழ்த்தி வைக்கின்றோம் என்பதைத் தயவுசெய்து உணருங்கள். "நூலைப்போல் சேலை, தாயைப்போல் பிள்ளை" என்ற பழமொழி உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்த மடமையை, வறுமையை, நீங்கள் வளர்க்கப் போகின்றீர்கள்?

[இந்தக் கட்டுரையைப் படித்ததின் அல்லது எடுத்துச் சொல்லியதின் விளைவாகக் கார்த்திகை தீபப்பண்டிகையை நிறுத்தி விட்ட தாய்மார்களின் பெயர்களை எழுதியனுப்பினால் பிரசுரிக்கப்படும்.

ஆ—ர்.]

---

தென்னை, பனை போன்ற மரங்களின் அடிப்பாகம் அவை எட்டடி உயரம் வளர்ந்த பிறகு குறுக்களவில் அதிகப்படுவதில்லையாம். அவை நூறு அடி உயரத்திற்கு மேல் வளர்ந்தாலும் குறுக்களவு அப்படியேதான் இருக்குமாம்.

o o

வாத்துகள் ஒரு மணிக்கு 55 மைல் வேகத்தில் பறக்குமாம்.

---

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

## நீங்கள் அறிவீர்களா?

★

லண்டனிலுள்ள ஒரு கம்பெனியார் உலோகத் தகடு முதல் மாக்கட்டை வரை எந்தப் பொருளின் மீதும் எழுத்துக்களைப் பொறிக்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு அச்சு இயந்திரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்களாம். அதன் பெயர் "மார்க் மாஸ்டர்" (Mark Master) என்பதாம். சித்திரங்கள், அலங்கார விளம்பரங்கள் இவைகளை விரைவாகவும், சிறப்பான முறையிலும் அட்டை, தோல், பிளாஸ்டிக், துணி, ரப்பர், மரம், உலோகத் தகடுகள், இவைகளின் மீது பொறிப்பதற்காகவே பிரத்தியேகமாக இது தயாரிக்கப்படுகின்றதாம். இன்னும் இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த இயந்திரம் ஒரு சாதாரண, சிறிய டைப்ரைட்டர் அளவில்தான் இருக்குமாம். இதில் அட்டையிலிருந்து உலோகத் தகடு வரை எல்லாப் பொருள்களையும் வெட்டக்கூடிய கூர்மையான கத்தியும் இணைக்கப் படுமாம். மேலும் ஒரே சமயத்தில் பல வர்ணங்களில் அச்சியறறவும் முடியுமாம்.

o o o

உலகத்திலுள்ள மிகப் பெரிய, வான ஊர்தியின் உருளையில் உள்ள, "ரப்பர் டயர்" 1400 பவுண்டு எடையும் 9 அடி குறுக்களவும் உள்ளதாம்.

o o o

கோதுமைப் பயிரை அறுத்து, அடித்து, தானியத்தை வேறாக்கி, மாவாக அரைத்து அதை ரொட்டியாகச் செய்வதற்குச் சுமார் 40 நிமிடம் ஆகிறதாம். பிரிட்டனில் செய்யப்பட்ட இச்செயல்தான், உலகிலேயே மிகக் குறைந்த நேரத்தில் முடிந்ததாம்.

o o o

மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் தாயாரான அகஸ்டா அரசியாரால் 1759ம் ஆண்டில் லண்டனில் நிறுவப்பட்ட "கியூ கார்டன்ஸ்" என்று சொல்லப்படும், 288 ஏக்கர் பரப்புள்ள தோட்டத்தில், வெவ்வேறு வகையான 25000 பயிர்கள் விளைவிக்கப்படுகின்றனவாம்.

o o o

1946ம் ஆண்டில் உலகப் புகழ்பெற்ற லண்டன் மார்க்கட்டில் சுமார் 1,10,000 பவுன் பெறுமானமுள்ள வைரம் செலவாகியுள்ளதாம்.

o o o

குடியானவர்களுக்கு உபயோகமாகும்படி சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மின்சார மண் வெட்டி 20 நிமிடங்களில் 30 சதுரங்களுக்கு மண்ணை வெட்டி எடுக்கின்றதாம். இதைக் கொண்டு ஒரு உழைப்பாளி நாள் முழுவதும் களைப்பின்றி வேலை செய்யலாமாம்.